KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 221 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை
(01.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 02, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

# இந்தியா - பாகிஸ்தான் நாடுகளிடையே போர் பதற்றம்!



- இரண்டு நாடுகளிலும் படைகள் உஷார் நிலையில்
- எல்லைகளுக்கு அதிரடியாக நகர்த்தப்படும் படையணிகள்

» 10 பக்கம்

## தொழிலாளர் தினம் இன்று

### கொழும்பில் மாத்திரம் 10 பேரணிகள்

» 02பக்கம்

## ஜி.எஸ்.பி. ப்ளஸ் வரிச் சலுகைக்கு நிபந்தனைகளை விதியுங்கள்!

### தமிழரின் எதிர்பார்ப்பு இதுவே என்கிறார் மனோ



» 02பக்கம்

## 21,000 அரச ஊழியர்கள் விசேட விடுமுறையில்

### ஆய்வறிக்கையில் வெளியான அதிர்ச்சித் தகவல்

கே. சுபானி

நாட்டில் அரச மற்றும் அரை அரச துறையில் பணியாற்றும் 1,156,018 ஊழியர்களில் 21,928 பேர் விசேட விடு முறையில் இருப்பதுடன், 13,396 பேர் வெளிநாட்டு பயணத்துக்காக இந்த விசேட விடுமுறையை பெற்றுக்கொண்டுள்ளனர். அத்துடன் அவர்களில் 8,532 பேர் அரச பணிகளுக்காக விடுமுறை பெற்றுக்கொண் டுள்ளதாக ஆய்வறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் ஆரம்ப அறிக்கையின்படி இந்த விடயம் தெரியவந் துள்ளது.

அந்த ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,... 02 பக்கம்

## ஜி.எஸ்.பி. ப்ளஸ் மீளாய்வு

### சாதகமான முறையில் இடம்பெறும்

### ஜனாதிபதியிடம் உறுதியளித்தது ஐரோப்பிய ஒன்றியம்



ஜி.எஸ்.பி. ப்ளஸ் வரிச் சலுகைக்கான மீளாய்வு சாதகமான முறையில் கருத்தில் கொள்ளப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவுக்கான தலைவர் சார்ள்ஸ் வைட்லி (Charles Whiteley) தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியப்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



இந்தியா பாகிஸ்தான் சண்டை வந்தா இலங்கை எந்தப் பக்கம் நிற்கும்...?
அதுக்கும் இந்த எலெக்சன் நேரத்தில இப்படியொரு தர்மசங்கடம் பாருங்கோ...

## மின் கட்டணத் திருத்தத்தை விரைவுபடுத்தல் அவசியம்

### நாணய நிதியம் பரிந்துரை



நா. தினுஷா

இலங்கையின் நிதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக செலவை ஈடுசெய் யும் வகையில் மின் கட்டணத்தில் திருத்தம் செய்யவேண்டுமென சர்வதேச நாணய நிதியம் பரிந்துரை செய்துள்ளது.

முடிந்தளவு விரைவாக இந்தக் கட்டணத் திருத் தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று நாணய நிதியத்தின் இலங்கைக்கான தலைமை பிரதானி எவன் பெப்பர் ஜோர்ஜியோ தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான கடன் தொகைக்கான நான்காவது மதிப்பாய்வை இறுதி செய்து, நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கிடையிலான... » 02 பக்கம்

## பத்திரிகை விலை 10 ரூபாவால் உயர்வு

‘தமிழன்’ நாளிதழின் விலை இன்று முதல் 50 ரூபாவாக அதிகரிக்கப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம். நாட்டின் தற் போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தை வாசகர்கள் தயை கூர்ந்து புரிந்து, எம்முடன் தொடர்ந் தும் பயணிப்பீர்களென உறுதியாக நம்புகிறோம்.



## மின் கட்டணத் திருத்தம் ஜூலையில்

### 10 சதவீத அதிகரிப்புக்கு அவசியமில்லை என்றது அரசு



» 02பக்கம்

## உஷ்



முன்னாள் ஜனாதிபதி விரைவில் அமெரிக்காவுக்கு செல்லவுள்ளாராம்.

இலங்கை மீதான வரிவிதிப்பு குறித்து ட்ரம்ப் நிர்வாகத்துடன் பேச்சு நடத்த தனக்கிருக்கும் செல்வாக்கை பயன்படுத்த அவர் விரும்புவதாக சொல்லப்படுகிறது.

தன்னுடன் இலங்கை நிதித்துறையின் மூத்த அதிகாரிகளை அவர் அழைத்துச் செல்வாரென்றும் அறியமுடிந்தது.

## 28 முதல் வாகன இலக்கத் தகடு விநியோகம் இடைநிறுத்தம்



### கட்டண நிலுவையால் அச்சுப் பணிகள் தாமதம்

வாகனங்களுக்கான இலக்கத் தகடுகள் விநியோக செயற்பாடுகளை ஏப்ரல் 28ஆம் திகதிமுதல் அமுலுக்கு வரும்வகையில் நிறுத்துவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

» 02 பக்கம்



## 28 முதல் வாகன...

அதற்கமைய, ஆயிரக்கணக்கான கைமாற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் முதன் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்கு இலக்கத் தகடுகளை அச்சிட முடியாமல் இடைநிறுத்தியுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் தனியார் நிறுவனம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்துக்கு இடையிலான ஒப்பந்த சிக்கல் மற்றும் அந்த நிறுவனத்துக்கு செலுத்தப்பட வேண்டிய நிதியை செலுத்தாமை இந்த நிலைமைக்கு காரணமென வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் இந்த நிறுவனம் தமது ஏகமனதான தீர்மானத்துக்கமைய வாகன இலக்கத் தகடு அச்சிடும் பணிகளை இடைநிறுத்தியுள்ளதுடன் மோட்டார் வாகனப் போக்குவரத்து முன்னாள் ஆணையாளர் நாயகத்தினதும் போக்குவரத்து அமைச்சின் தலையீட்டினாலும் வாகன தகடு அச்சிடும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க இந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த நிலைமையின் மத்தியில் இலக்கத் தகடு அச்சிடும் செயற்பாடுகளுக்காக தனியார் விநியோகஸ்தர் ஒருவரை தெரிவு செய்வதற்கான விலைமனுக்கோரலும் போக்குவரத்து அமைச்சினால் கடந்த 28ஆம் திகதி கோரப்பட்டது. இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க, இலக்கத் தகடு அச்சிடும் நிறுவனத்துடன் கலந்துரையாடி வருகிறோம். இதுதொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் விலை திருத்தம்

எரிபொருள் விலை திருத்தம் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.குறித்த அறிக்கையில்,நேற்று (30) நள்ளிரவு முதல் குறித்த விலைத்திருத்தம் அமுலாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க 92 ஒக்டேன் பெற்றோல் லீட்டரொன்றின் விலை 6 ரூபாவாலும் 95 ஒக்டேன் பெற்றோல் லீட்டரொன்றின் விலை 20 ரூபாவாலும் டீசல் லீட்டரொன்றின் விலை 12 ரூபாவாலும் சூப்பர் டீசல் லீட்டரொன்றின் விலை 6 ரூபாவாலும் மண்ணெண்ணெய் லீட்டரொன்றின் விலை 5 ரூபாவாலும் குறைக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை லங்கா ஐ.ஓ.சியும் சிபெட்கோ விலை திருத்தத்துக்கமைய தனது எரிபொருள் விலைகளை திருத்தியுள்ளது.

## தொழிலாளர் தினம் இன்று...

உலக தொழிலாளர் தினம் இன்றாகும். தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று கொழும்பில் மாத்திரம் 15 ஊர்வலங்கள், பேரணிகள் மற்றும் கொண்டாட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்றைய தினம் கொண்டாடப்படும் உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களினால் மே தின ஊர்வலங்கள், பேரணிகள் மற்றும் கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், அதற்கான பாதுகாப்பு, வாகனப் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புத் திட்டங்களும் பொதுப் போக்குவரத்தை முறையாக முன்னெடுப்பதற்காக பொலிஸார் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வெளி மாகாணங்களில் இடம்பெறும் மே தினப் பேரணிகள், கூட்டங்கள் மற்றும் கொண்டாட்ட நிகழ்வுகள் தொடர்பில் அவசியமான பாதுகாப்பு, வாகன போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாணங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள், மாவட்டங்களுக்கு பொறுப்பான பொலிஸ் மா அதிபர்கள் உள்ளிட்ட தொகுதிகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பொலிஸ் தலைமையகத்தால் இதுதொடர்பில் ஆலோசனைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பு காலி முகத்திடல் பகுதியில் பேரணியும் வாழைத்தோட்டம் பிரேமதாச சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வும் ஆமர்வீதியில் மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் ஈ.ஏ.குணசிங்க சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக ஆரம்பித்து ஒல்கொட் மாவத்தை, டெக்னிக்கல் சந்தி, சங்கராஜ மாவத்தை, பிரதீபா மாவத்தையினூடாக பீ.டீ. சிறிசேன விளையாட்டு மைதானம் வரை ஊர்வலமாக சென்று மக்கள் பேரணியொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு - 12 சாங்விஹாராச்சி மாவத்தை, டெக்னிக்கல் சந்தி, ஓராபிபாஷா மாவத்தையூடாக மருதானை பாலம் சந்தி, காமினி சுற்றுவட்டாரம், டீ.ஆர். விஜேவர்தன மாவத்தையினூடாக தபால் தலைமையகம் வரை ஊர்வலமாக சென்று பேரணியொன்றை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டிமெல் பார்க்கிலிருந்து யூனியன் பிளேஸினூடாக ஹைட் பார்க் வரை ஊர்வலமாக சென்று பேரணி நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நூலகக் கேட்போர் கூட வளாகத்தில் பேரணியும் விகாரமகாதேவி திறந்த வெளியரங்கில் பேரணியும் ஆர்ஆர்.சீ.யிலிருந்து லலித் அதுலத்முதலி வரை ஊர்வலமும் பேரணியும் முன்னெடுக்கப்படவுள்ளது.

அவிசாவளை வீதி அரச களஞ்சிய கட்டடத்தொகுதிக்கு அருகிலிருந்து ஆரம்பித்து ஒருகொடவத்தை ஸ்டேஸ் வீதியினூடாக கொஸ்கஸ் சந்தி வரை ஊர்வல பேரணியும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பாலா தப்போ குறுக்குத் தெரிவில் ஆரம்பித்து காலி முகத்திடல் சுற்றுவட்டாரத்தில் திரும்பி கொள்ளுப்பிட்டி சந்திக்கு பயணித்து மீண்டும் காலி வீதியினூடாக பாலா தப்போ குறுக்குதெரு வரை ஊர்வலம் சென்றும் பேரணி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென். மைக்கல் தேவாலயத்தில் ஆரம்பித்து ஹட்சன் வீதி, நெல்சன் குறுத்துத்தெரு தர்மகீர்த்தி ஆராம வீதி, காமல் வீதி, கெமரன் பிளேஸினூடாக மீண்டும் தேவாலயம் வரை ஊர்வலமாக வந்து பேரணி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலலசேகர மாவத்தை, ஆர்கேட்டுக்கு அருகில் ஆரம்பித்து பௌத்தாலோக்க மாவத்தை, பொரளை பொது மயானம் சுற்றவட்டாரம், எல்விட்டிகல மாவத்தையினூடாக நாரஹேன்பிட்டி சந்தி வரை ஊர்வலமாக பேரணி நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, புதிய நகர மண்டபத்துக்கு முன்பாக ஆரம்பித்து கன்னங்கர மாவத்தை, எப்.ஆர். சேனாநாயக்க மாவத்தை, தர்மபால மாவத்தை, நூலக சுற்றுவட்டாரம், கிரீன் பார்த் ஹோர்டன் மாவத்தையினூடாக மீண்டும் புதிய நகரமண்டபம் வரை ஊர்வலமாகச் சென்று பேரணி நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தலவாக்கலை நகர சபை விளையாட்டரங்கிலும் மக்கள் பேரணியொன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் இடம்பெறும் மே தின ஊர்வலங்கள், பேரணிகள் மற்றும் கொண்டாட்ட நிகழ்வுகள் காரணமாக வாகன நெரிசல் ஏற்பட்டால் அந்த பிரதேசத்தை தவிர்த்து வேறு மாற்று வீதிகளூடாக பயணங்களை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஜி.எஸ்.பி. ப்ளஸ் மீளாய்வு...

பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையில் நேற்று (30) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையா டலின்போதே சார்ள்ஸ் வைட்லி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, வர்த்தக ரீதியான பல வெற்றிகளை அடைய உதவியுள்ளது என்றும் தொடர்ந்தும் வர்த்தக வெற்றிகளை அடைய இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் சார்ள்ஸ் வைட்லி தெரிவித்தார்.

மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. ப்ளஸ் வரிச் சலுகை தரப்படுத்தப்பட்ட மற்றும் தரமான பொருட்களை விநியோகிக்க இலங்கைக்கு மேலும் ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. ப்ளஸ் வரிச் சலுகையை வழங்க, கருத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றன என்றும் சார்ள்ஸ் வைட்லி குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. ப்ளஸ் வரிச் சலுகை அல்லது பொதுவான விருப்பத்தெரிவு முறை தொடர்பான 27 சர்வதேச இணக்கப்பாடுகளை செயற்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தி ருந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஐரோப்பிய ஒன்றி யத்தின் ஜி.எஸ்.பி. ப்ளஸ் வரிச் சலுகை இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளதுடன் பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்தியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி தொடர்ந்தும் தெரிவிக்கையில், ''இலங்கை பொருளாதார ரீதியில் சரிவடைவதற்கு முன்னைய ஆட்சியாளர்களின் அரசியல் முறையும் வீண்விரயமும் மோசடியுமே காரணமாக அமைந்திருந்தது. இப்போது நாடு மீண்டும் சரியான நிர்வாகத்தைக் கொண்டதாக மாற்றப்பட்டு வருகிறது. அதற்கு சிறிது காலம் அவகாசம் அவசியம். தற்போதைய அரசாங்கத்தின் மீது ஒட்டுமொத்த மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இலங்கையில் முன்னைய அரசாங்கங்கள் தெற்கு சிங்கள வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன. ஆனால் இம்முறை வடக்கின் தமிழ் மக்கள், கிழக்கின் முஸ்லிம் மக்கள் மற்றும் தெற்கு சிங்கள மக்களும் தற்போதைய அரசாங்கத்தை உருவாக்க ஆதரவளித்தனர். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும்'' என்றார்.

இந்நிகழ்வில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கார்மென் மொரெனோ (Carmen Moreno), வர்த்தகம் மற்றும் பொருளாதார பாதுகாப்பு ஜெனரல், கொள்கை அதிகாரி கைடோ டோலாரா (Guido Dolara), ஐரோப்பிய பிரத்தியேக நடவடிக்கை சேவையின் இலங்கை அதிகாரி கலிஜா அகிஷேவா (Galija Agisheva) ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## 21,000 அரச ஊழியர்கள்...

''கடந்த ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, ஒட்டுமொத்த அரச மற்றும் அரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை 1,156,018 ஆக இருந்தது. இது 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 46,543 அதிகமாகும். அந்தவகையில் 2016ஆம் ஆண்டு நாட்டின் அரச மற்றும் அரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை 1,109,475 ஆக காணப்பட்டது.

நாட்டிலுள்ள மொத்த அரச மற்றும் அரை அரச ஊழியர்களில் 688,669 பேர் மத்திய அரசையும் 467,349 பேர் மாகாண சபைக்குட்பட்ட நிறுவனங்களையும் சேர்ந்தவர்கள். மத்திய அரசுக்குச் சொந்தமான அரச மற்றும் அரை அரச ஊழியர்களில் பெரும்பாலானோர் ஆண்கள் என்பதுடன் மாகாண சபைக்குட்பட்ட நிறுவனங்களில் பணியாற்றும் அரச மற்றும் அரை அரச ஊழியர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர்.

அவர்களில் 938,763 பேர் அரச ஊழியர்கள் என்பதுடன் 217,255 பேர் அரை அரச ஊழியர்களாவர்.

நாட்டிலுள்ள அரச மற்றும் அரை அரச ஊழியர்களுள் 50.5 சதவீதமானோர் அதாவது 583,363 ஆண்கள் என்பதுடன் 49.5 சதவீதமானோர் அதாவது 572,655 பேர் பெண்களாவர்.

இதேவேளை, 1,156,018 அரச மற்றும் அரை அரச ஊழியர்களில் 1,113,344 பேர் அல்லது 96.3 சதவீதம் பேர் நிரந்தர ஊழியர்களாவர். எஞ்சியோர் ஒப்பந்த, சாதாரண மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களாவர். மேலும், நாட்டின் அரச மற்றும் அரை அரச ஊழியர்களில் அதிகமானோர் மத்திய அரச ஊழியர்களாவர். அந்தவகையில் 475,483 பேர் மத்திய அரச துறையில் பணியாற்றுகின்றனர். அவர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் 279,194 அல்லது 58.7 சதவீதத்தினர் ஆண்கள் என்பதுடன் 196,289 அல்லது 41.3 சதவீதமானோர் பெண்களாவர்.

அதேபோன்று மத்திய அரசுக்கு பொறுப்பான அரை அரச ஊழியர்கள் 213,186 பேர் இருப்பதுடன் 148,439 பேர் அதாவது 69.6 சதவீதமானோர் ஆண்களாவர். அரை அரச ஊழியர்களில் 64,747 பேர் பெண்கள் என்பதுடன் அதாவது 30.4 சதவீதமாகும்.மேலும் மத்திய அரசு மற்றும் அரை அரச சேவையாளர்களில் 463,280 பேர் மாகாண சபைக்குட்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் என்பதுடன் அவர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் 310,573 பேர் அதாவது 67 சதவீதமானோர் பெண்களாவர். அதேபோன்று 152,707 பேர் மாகாண சபை நிறுவனங்களுக்குட்பட்ட அரச சேவையாளர்களாவர். அதாவது 33 சதவீதமாகும். எனினும் நாட்டின் மாகாண சபை நிறுவனங்களுக்குட்பட்ட 4,069 பேர் அரச சேவையாளர்களாவர். அவர்களில் 3,023 பேர் அதாவது 74.3 சதவீதமானோர் ஆண்கள் என்பதுடன் 1,046 பேர் அதாவது 25.7 சதவீதமானோர் பெண்களாவர்.

2024ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் அரை அரச ஊழியர்கள் குறித்த கணக்கெடுப்பானது, நாட்டிலுள்ள அரச ஊழியர்கள் தொடர்பில் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட 09ஆவது கணக்கெடுப்பு என்பதுடன் 08ஆவது கணக்கெடுப்பு இதற்கு முன்னர் 2016 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின் கட்டணத் திருத்தத்தை...

அதிகாரிகள் மட்ட ஒப்பந்தத்தில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. அதற்கமைய, நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு பணிப்பாளர் தரப்பின் அனுமதி கிடைத்ததன் பின்னர் இலங்கைக்கு மேலும் 344 மில்லியன் டொலர் கிடைக்கப்பெறுமென அந்த நிதியம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு இலங்கைக்கான தலைமை பிரதானி எவன் பெப்பர் ஜோர்ஜியோ தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''மின்சார செலவுக்கான ஈடுசெய்யும் கட்டண முறையை இன்னும் அடையவில்லை. அதற்கு மேலதிகமான தொகை விநியோக வரி கணக்கை அடிப்படையாகக் கொண்டு சுயமாக செயற்படுத்தக் கூடிய கட்டணத் திருத்த முறையை இந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் அதாவது ஏப்ரல் மாத வரி திருத்தத்திலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதன் பிரதிபலனாக சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்தின் கீழ், ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக குறிப்பிடப்பட்டுள்ள மின்சார செலவுக்கு ஏற்ற மீட்புக் கட்டண நிர்ணயம் மற்றும் சுய மின்கட்டணத் திருத்த முறையை BSTA யின் அடிப்படையில் செயற்படுத்த வேண்டியது தீர்மானமிக்கதாகும். இந்த அடிப்படை செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதானது, கடன் வேலைத்திட்டத்தின் நான்காவது மீளாய்வை பூரணப்படுத்துவதற்கு முக்கியமான திருப்புமுனையாகும். இந்த முழு செயற்பாட்டையும் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய கால அட்டவணையை கண்காணிப்பு அதிகாரிகளான பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கொடுத்திருக்கிறோம். எதிர்காலத்தில் மின்சார சபைக்கு நிதி நட்டம் ஏற்படாமல் இருப்பதற்கு இந்தச் செயற்பாட்டை முடிந்தளவு விரைவில் நடைமுறைப்படுத்துமாறு நாங்கள் அவர்களிடம் கோருகிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## மின் கட்டணத் திருத்தம்...

''மின் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்வதில், தரவுகள் தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவுக்கு வரமுடியாமல் இருப்பதே சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. அதற்காக குறுகிய காலத்தை பெற்றுக்கொடுக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியுள்ளோம். ஜூலை மாதமாகும்போது அனுமானங்களிலுள்ள பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்து கொண்டு முறையாக கட்டணத் திருத்தங்களுடன் முன்னோக்கி செல்ல நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது'' என்று தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும், இரு வாரங்களில் சுயாதீனமாக மின்கட்டணத்தை 10 சதவீதத்தால் திடீரென அதிகரிப்பதற்கான அவசியம் ஏற்படாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று(30) இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகாரிகள் மட்டத்திலான ஒப்பந்தத்தில், பொருளாதாரக் கொள்கை தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இந்த அடிப்படை இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதென்றால் நான்காவது மீளாய்வை நிறைவு செய்து அதன் அறிக்கையை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தால் மாத்திரமே அடுத்த கடன் தவணையை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான படிமுறைகளை நாம் செய்துள்ளோம். அதேபோன்று இந்த வேலைத்திட்டத்தின் வினைத்திறன் மிகவும் பலமாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக பொருளாதாரம் நிலைத்தன்மை அற்றது என்பதால் அது நிச்சயமற்ற நிலைமையை ஏற்படுத்தலாம். அவ்வாறான அவசர நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் இருதரப்பும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தவும் நாணய நிதிய அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் நடைமுறையில் இருக்கும்போதே உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்கள் நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கமைய நிதி நிவாரணத்தை வழங்க ஆரம்பக் கட்டத்தில் இணக்கம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன. தற்போதுள்ள நிலைமையை கருத்திற்கொண்டு அவர்களின் நிதி வழங்கல் உறுதிப்பாடும் மிக அவசியமானதாகும். உலக வங்கிக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள், நடவடிக்கைகள் மிகவும் சுமுகமான நிலையில் இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் 2028ஆம் ஆண்டு வரையான கடன் திட்டங்கள் தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்திவருகிறோம். அதற்கு அப்பால் பாதீட்டுக்கான நிதி ஒத்துழைப்பை வழங்கவும் அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். மின் கட்டணத்தை பொறுத்தவரையில், செலவை நிவர்த்தி செய்யும் விதத்திலேயே மின் கட்டணத்தை தீர்மானிக்க வேண்டும். அதற்கு நாமும் நாணய நிதியத்துடன் இணங்கியுள்ளோம். அதற்கென கட்டண சூத்திரமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மின்னுற்பத்தி இடம்பெறுவதால், அவ்வாறான மின்னுற்பத்திகளுக்கு எதிர்காலத்தில் செலவு அதிகரிப்பு மற்றும் காலநிலை மாற்றத்தின் அடிப்படையில் கட்டண சூத்திரமும் மாற்றமடைவதாலும் மதிப்பீடு செய்யப்பட்ட காலக்கட்டத்தில் மின் உற்பத்தி இடம்பெறும் விதத்தையும் அதன் பின்னர் கிடைத்த இலாபத்தையும் அடிப்படையாகக் கொண்டே மின் கட்டண சூத்திரம் தயாரிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் திட்டத்துக்கு நாமும் இணக்கம் தெரிவித்திருக்கிறோம். இதில் சிக்கல் இல்லை. ஆனால், இந்த ஒப்பீடுகளை செய்து விலைத்திருத்தம் செய்வதை தொடர் கட்டமைப்பு அளவுகோல் என்று கூறுகிறோம். எனவே, நாம் கட்டண சூத்திரத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளோம். அந்த சூத்திரத்துக்கமைய இந்தக் கட்டண அளவுகோளை எவ்வாறு தொடர்ந்து முன்னெடுப்பது என்பதிலேயே இந்த விடயம் இருக்கிறது. தொடர்ந்து முன்னெடுத்தல் என்பது காலாண்டுகளின் அடிப்படையிலேயே இந்த விடயம் தீர்மானிக்கப்படுகிறது.

எனவே, காலாண்டின் அடிப்படையிலேயே மின் கட்டணத்தை செலவுக்கு ஏற்புடையதாக்க வேண்டும். அதாவது திருத்தியமைக்க வேண்டும். அவ்வாறு திருத்தினாலும் ஆறு மாத தரவுகளே மதிப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மின் கட்டணத்தை மாதாந்தம் அல்லது காலாண்டுகளுக்கு திருத்த நடவடிக்கை எடுத்தால் உற்பத்தி செயற்பாடுகள் நேரடி தாக்கம் செலுத்துவதால் உற்பத்தி செலவிலும் மாற்றம் ஏற்படக் கூடும்.

எது எவ்வாறாக இருந்தாலும் நாம் தொடர் கட்டமைப்பு அளவுகோலுக்குள்ளேயே இருக்கிறோம். அதனால் ஒவ்வொரு காலாண்டுகளிலும் திருத்தத்தை நோக்கி செல்ல நேரிடும். காலாண்டு கட்டணத் திருத்தத்திலுல் சிக்கல் இருக்கிறது. அதனை மாற்றியமைப்பதற்கு இணக்கம் ஏற்படுத்திகொண்டுள்ளோம். அதனை செயற்படுத்த வேண்டும். ஜனவரி மாதம் மேற்கொண்ட 20 சதவீதக் கட்டண குறைப்பை தொடர்ந்து அடுத்த காலாண்டு இந்த ஏப்ரல் மாதமாகும். இந்த காலாண்டுக்கான தரவுகள் மின்சார சபையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு பெற்றுக்கொடுத்ததன் பின்னர் அதுதொடர்பில் மதிப்பாய்வுகள் செய்து, அதுதொடர்பில் தெளிவுபடுத்தல்களுடன் கணக்காய்வு நடத்த வேண்டும். பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீனம் என்பதால் அவர்கள் கலந்துரையாடி தீர்மானத்துக்கு வரவேண்டும்.

ஏப்ரல் மாதத்தில் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளமையே சிக்கலாகும். அதற்காக அதன் பொருள் செலவை ஈடுசெய்தல் என்பதல்ல. தரவுகள் தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவுக்கு வரமுடியாமல் இருப்பதே சிக்கலாகும். இதனை நாங்கள் நாணய நிதியத்துக்கும் அறிவித்திருக்கிறோம். குறுகிய காலத்தை பெற்றுக்கொடுங்கள். அடுத்த காலாண்டாகும்போது அதாவது ஜூலை மாதமாகும்போது அனுமானங்களிலுள்ள பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்து கொண்டு முறையாக முன்னோக்கிச் செல்வோம் என்று கோரியிருந்தோம். அதற்கு அவர்களும் இணக்கம் தெரிவித்திருந்தார்கள்.

ஏப்ரல் மாதத்தில் கட்டணத் திருத்தத்தை செய்யாமையினாலேயே திருத்தம் செய்யப்படவில்லை என்று நாணய நிதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்காக செலவை ஈடுசெய்ய முடியவில்லை என்பது பொருளல்ல. மின் உற்பத்திக்காக மின்சார சபை குறுகிய கால கடன்களுக்குச் சென்றால், அதற்கு முன்னர் சுயாதீனமாக மின் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனையும் நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். கடன்பெறும்போது 15 பில்லியனுக்கும் குறைவான நட்டம் ஏற்படுமாக இருந்தால் இரு வாரத்தில் 10 வீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும். ஆனால் அதற்கான வாய்ப்பும் இல்லை. 15 பில்லியன் ரூபாவை கடந்து செல்வதற்கான நிலைமை நாட்டில் இல்லை'' என்றார்.

## ஜி.எஸ்.பி. ப்ளஸ்...

சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் சலிப்பு அடைந்து விட்டார்கள். இலங்கை தொடர்பில் ஐ.நாவில் பிரதான பங்களிப்பு செய்த அமெரிக்காவும் இன்று ஒதுங்கி விட்டது. இந்நிலையில் எமது கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் என்பதை புரிந்து கொண்டு நீங்கள் இலங்கை விவகாரத்தை அணுகுங்கள். பயங்கரவாத தடை சட்டத்தின் உடனடி இடை நிறுத்தம், புதிய அரசியலமைப்புக்கான கலந்துரையாடல் உடனடி ஆரம்பம், உண்மை ஆணைக்குழு (Truth Commission) மூலம் காணாமல் போனோர் மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரங்களின் உடனடி அர்த்தபூர்வ நடவடிக்கை, நீண்டகால தமிழ் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை, நவீன அடிமைத்துவம் அம்சங்களை கொண்ட மலையக தமிழர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட வாழ் மக்களை ஐரோப்பிய கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வந்து அவர்களது காணி உரிமை உட்பட வாழ்வுரிமைகளை மேம்படுத்தல் ஆகியவை தொடர்பான முன்மொழிவுகளை எழுத்து மூலமாகவும் உரையாடல் மூலமாகவும் இலங்கைக்கு வரிச்சலுகையை தொடர்ந்து வழங்கலாமா? என ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. ப்ளஸ் (GSP+) கண்காணிப்பு குழுவினரிடம் நாம் நேரடியாக சமர்பித்தோம். இந்த நிபந்தனைகளை திகதி குறித்து நிறைவேற்றினால் மாத்திரமே இலங்கைக்கு ஜி.எஸ்.பி. ப்ளஸ் (GSP+) வரி சலுகை வழங்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. ப்ளஸ் வரி சலுகை கண்காணிப்பு குழுவுக்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவுக்கும் இடையில் சந்திப்பு உரையாடல் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதரகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதி தலைவர் வே. இராதாகிருஷ்ணன் எம்.பி., ஐ.ம.மு. சர்வதேச விவகார உப தலைவர் பாரத் அருள்சாமி, ஐ.ம.மு. சட்ட விவகார செயலாளர் சக்சின் கணேசன் ஆகியோரும் ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் தூதுவர் கார்மென் மொரேனோ, அரசியல் செயலர், கரோலினா மற்றும் ஐந்து பேர் கொண்ட ஜி.எஸ்.பி. ப்ளஸ் கண்காணிப்பு ஆகியோரும் கலந்துரையாடலில் இடம்பெற்றனர்.

இது தொடர்பில், மனோ எம்பி தலைமையில் தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவினர் ஐரோப்பிய ஒன்றிய ஜீஎஸ்பி ப்ளஸ் (GSP+) கண்காணிப்பு குழுவினரிடம் கையளித்த முன்மொழிவுகள் அடங்கிய ஆவணத்தில் தெரிவிக்க பட்டுள்ளதாவது;

***(01) பயங்கரவாத தடை சட்டம்***

இன்றைய தேவைக்கு குற்றவியல் சட்டக்கோவை தாராளமாக போதுமானது. இதுவே ஜே.வி.பியின் கடந்த கால நிலைப்பாடாக இருந்தது. எனினும் புதிய சட்டம் அவசியமாயின் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் புதிய மசோதா பாராளுமன்றத்தில் விவாதிக்க பட்டு தீர்மானிக்க படும்வரை இன்றைய பயங்கரவாத தடை சட்ட பாவனை உடனடியாக இடை நிறுத்தப்பட வேண்டும்.

***(02) புதிய அரசியலமைப்பு***

இந்த அரசு தேர்தல் வேளையில், கடந்த நல்லாட்சி காலத்தில் ஆரம்பிக்கபட்டு இடையில் நிறுத்த பட்ட புதிய அரசியலமைப்பு பணியை நிறுத்த பட்ட இடத்தில் இருந்து மீள ஆரம்பிப்போம் என உறுதி அளித்தது. அவ்வேளையில் நானும், இன்றைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் அந்த புதிய அரசியலமைப்பு வழிகாட்டல் குழுவில் இருந்தோம். இந்த பணி இந்த வருடமே செய்து முடிக்கப்பட வேண்டும். வருடங்கள் கடந்தால் இதை ஒரு போதும் செய்து முடிக்க முடியாது என்பது எமது அனுபவமாகும். ஆகவே, இன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு கலந்துரையாடல் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகார பகிர்வின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும்.

***(03) பொறுப்பு கூறல்***

உடனடியாக உண்மை ஆணைக்குழு (Truth Commission) ஆரம்பிக்கப்பட்டு, பொறுப்புக் கூறல் அடிப்படையில் வலிந்து காணாமல் போனோர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

***(04) தமிழ் அரசியல் கைதிகள்***

பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைதாகி சிறையில் இருக்கும் அனைத்து அரசியல் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இன்று பத்து தமிழ் கைதிகள் நீண்டகாலமாக உள்ளனர். அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். கைதிகளின் பெயர் பட்டியல் விபரங்களை, "குரலற்றவர்களின் குரல்" அமைப்பின் சார்பாக மு. கோமகன் தயாரிக்க, மக்கள் போராட்ட முன்னணி சார்பாக தோழர் ராஜ்குமார் ராஜீவ்காந்த் எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அது இங்கே ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி .ப்ளஸ் (GSP+) கண்காணிப்பு குழுவினரிடம் தரப்படுகிறது.

***(05) பெருந்தோட்ட மக்கள்***

மலையக தமிழ் மக்கள் பரப்பில் இருக்கின்ற பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் மிகவும் நலிவுற்ற பிரிவினர். இந்த மக்களின் நிலைமை இனிமேல் ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. ப்ளஸ் (GSP+) கண்காணிப்பின் கீழ் வர வேண்டும். அதற்கான தரவுகள்:

(அ) தோட்டங்களில் உற்பத்தியாகும் தேயிலை ஐரோப்பிய காலை உணவு மேசை வரை செல்லும் விநியோக பாதையின் ஆரம்பமான பெருந்தோட்டங்கள் நவீன அடிமைத்துவ அம்சங்களை கொண்டிருக்கின்றமை.

(ஆ) அரசின் சமூக பாதுகாப்பு திட்டங்கள், பெருந்தோட்ட மக்களை போதுமான அளவு உள்வாங்காததால், அவர்கள் தனியார் கம்பனிகளின் தயவில் வாழ வேண்டி உள்ளமை.

(இ) நவீன அடிமைத்துவ தினக்கூலி தொழிலாளர் என்ற நிலையில் இருந்து, பெருந்தோட்ட தொழில் துறையில் கூட்டு பங்காளராக மாறுகின்ற கூட்டு வர்த்தக மாற்றம் வராமை.

(ஈ) தேசிய நீரோட்டத்தில் இருந்து திட்டமிட்ட முறையில் தள்ளிவைக்கப்பட்ட காரணத்தால், சம உரிமை மறுக்கப்பட்டு, நில உரிமை, வீட்டு உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை, வாழ்வாதார உரிமை ஆகியவை மறுக்கப்பட்டு, பொது நிர்வாக, சமூக கட்டமைப்பு மற்றும் நாட்டின் பொது நல சேவைகள் கிடைக்காமை.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 18ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்** நீங்கள் நினைத்ததை தைரியத்துடன் சாதீப்பீர்கள். தேவைக்கேற்ப பணம் நிறைவைத் தரும்.

**ரிஷபம்** வீட்டுக்கான முக்கிய செலவுகளை இன்று செய்வீர்கள். காரியங்கள் சற்றுத் தாமதமாகி பின் நிறைவேறும்.

**மிதுனம்** குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். உடல் நோய்கள் குணமடையும். மன மகிழ்ச்சி உண்டு.

**கடகம்** ஆணவத்தை அடக்கினால் வெற்றி நிச்சயம். பயணங்களைக் குறைத்துக் கொண்டால் செலவுகள் கட்டுப்படும்.

**சிம்மம்** முக்கிய நண்பர்களைச் சந்தித்து கலந்துரையாடுவீர்கள். வெளியிடப் பயணத்தால் நன்மைகள் உண்டு.

**கன்னி** உறவினர்கள் உதவிக்கரம் நீட்டு வார்கள். புதிய முயற்சிகள் வெற்றி யளிக்கும். தொழில் முன்னேற்றம்.

**துலாம்** தந்தையின் உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள். சொத்துகளை உரிய முறையில் பேணுங்கள்.

**விருச்சிகம்** தொழில் இடத்தில் எதிலும் அவசர முடிவுகளை எடுக்காதீர்கள். உடல், மனம் இரண்டும் சோம்பிக் காணப்படும்.

**தனுசு** வெளியிடத்தில் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். நினைத்த காரியங் களை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள்.

**மகரம்** நீங்கள் எதிர்பார்த்த பணத்தொகை அல்லது கடன் தொகை கிடைக்கும். எதிரிகளால் நன்மை ஏற்படும் நாள்.

**கும்பம்** மனதை அங்குமிங்குமாக அலையவிடாதீர்கள். அதிர்ஷ்டத்தை நம்பி பணத்தை வீணடிக்காதீர்கள்.

**மீனம்** யாரையும் நம்பி இரகசியங்களை வெளிப்படுத்தாதீர்கள். வீடு, வாகனங் களால் தொல்லைகள் உண்டு.

| | |
|---|---|
| **திதி:** | சதுர்த்தி மு.ப.11.23 வரை பின் பஞ்சமி |
| **நட்சத்திரம்:** | மிருகசீரிடம் பி.ப.2.20 வரை பின் திருவாதிரை |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம்:** | மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை:** | தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்:** | காலை- 8.56 – 11.56 மணி வரை மாலை- 3.56 – 5.56 மணி வரை |
| **ராகு காலம்:** | 1.26 – 2.56 மணி வரை |
| **எமகண்டம் :** | 5.56 - 7.26 மணி வரை |
| **குளிகை :** | 8.56 - 10.26 மணி வரை |
| **சந்திராஷ்டமம்:** | விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 2.20 மணி வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 2.20 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:** சதுர்த்தி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம். தொலைபேசி : 077-0525325 078-6759739**

## மே தினத்தை முன்னிட்டு மதுபானசாலைகள் பூட்டு

மே தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலுமுள்ள மதுபானசாலைகள் மூடப்படுவது குறித்து கலால் திணைக்களம் நேற்று (30) விசேட அறிவிப்பை வெளியிட்டது.

குறித்த அறிவிப்பின்படி,

மே தினக் கூட்டங்கள் நடைபெறும் பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள சில்லறை மதுபான விற்பனை நிலையங்கள், நாளை மூடப்படுமென்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா மேம்பாட்டு ஆணையத்தின் ஒப்புதலுடன் சம்பந்தப்பட்ட பகுதிகளில் இயங்கும் ஹோட்டல்களுக்கு இது பொருந்தாது என கலால் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், இந்த உத்தரவை மீறுபவர்கள் குறித்த தகவல்களைத் தெரிவிக்க 1913 அல்லது 0112 877 688 என்ற எண்களுடன் தொடர்புகொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் கூடுகிறது பாராளுமன்ற அலுவல்கள் குழு



பாராளுமன்ற அலுவல்கள் குழு நாளை வெள்ளிக்கிழமை (02) கூடவுள்ளது.

கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் பாராளுமன்ற வளாகத்தில் காலை 9.30 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

அதன்படி, அடுத்த வாரத்துக்கான பாராளுமன்ற அலுவல்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

பட்டலந்த சித்திரவதைக் கூடங்கள் நிறுவப்பட்டு இயக்கப்பட்டதாகக் கூறப்படும் வழக்கில் விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை மீதான விவாதம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றம் கடைசியாக ஏப்ரல் 10ஆம் திகதி கூடியதுடன், அடுத்த அமர்வு இம்மாதம் 08 ஆம் திகதி கூடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மோட்டார் திணைக்களம் இரண்டு நாட்கள் பூட்டு

நாராஹேன்பிட்டியிலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தை எதிர்வரும் 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 05, எல்விட்டிகல மாவத்தை, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதன் காரணமாகவே இரு தினங்களுக்கு அலுவலத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேர்தல் தினமான மே 06ஆம் திகதி மற்றும் அதற்கு முதல் நாள் நாரஹேன்பிட்டியிலுள்ள மோட்டார் வாகனத் திணைக்கள அலுவலகம் பொதுக் கடமை களுக்காக மூடப்படவுள்ளதாகத் திணைக்களம் அறிவித்துள்ளது.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 மே 01 ஆம் திகதி, வியாழக்கிழமை

# நட்டஈட்டை செலுத்தினால் எல்லாம் சரியாகி விடுமா?

ரோயல் பார்க் கொலை வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால ஒரு மில்லியன் ரூபா இழப்பீட்டைச் செலுத்தி முடித்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

மேற்படி சம்பவத்தின் பிரதான சந்தேக நபருக்கு மன்னிப்பு வழங்கிய குற்றத்துக்காக விதிக்கப்பட்ட இழப்பீட்டையே சிறிசேன முழுமையாகச் செலுத்தி முடித்துள்ளதாக அவரின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, ரோயல் பார்க் கொலைக் குற்றவாளி ஜூட் ஜெயமஹாவை மன்னித்து சிறிசேன பிறப்பித்த உத்தரவை உயர் நீதிமன்றம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் இரத்துச்செய்து அது அரசியலமைப்புக்கு விரோதமானதென்று கூறியிருந்தது.எனவே, பிரதிவாதியான மைத்ரிபால சிறிசேன, மனுதாரருக்கு ஒரு மில்லியன் ரூபா இழப்பீட்டை வழங்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இராஜகிரிய ரோயல் பார்க் சொகுசு குடியிருப்புத் தொகுதியின் படிக்கட்டுகளில் வைத்து 2005 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி தனது காதலியின் சகோதரியான 19 வயதுடைய இவோன் ஜோன்சன் எனும் யுவதியை கழுத்தை நெரித்தும் தலையை தரையில் அடித்து மண்டையோட்டை 64 இடங்களில் சேதப்படுத்தியும் கொடூரமாகக் கொலை செய்தார் ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜெயமஹா என்பவர் .

இக்கொலைக்குற்றத்துக்காக அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 12 வருட கால சிறைத் தண்டனை விதித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து குற்றவாளி மேன்முறையீடு செய்திருந்தார் . மேன்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிமன்றம் குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். அந்த மனுவை நிராகரித்த உயர் நீதிமன்றம் அவருக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை உறுதி செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜெயமஹாவுக்கு 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக்கிய மைத்ரிபால சிறிசேன தனது பதவி முடிவதற்கு சுமார் 8 நாட்களே இருந்த நிலையில், பூரண மன்னிப்பளித்து விடுதலை செய்தார்.

மைத்ரிபால சிறிசேனவின் மேற்படி செயற்பாடு தொடர்பில் தமது அதிருப்தியை கொலையுண்ட யுவதியின் குடும்பம் வெளியிட்டது. ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தனது குடும்பத்துக்கு மீண்டும் தாங்க முடியாத வேதனையை ஏற்படுத்தியுள்ளார் என ரோயல் பார்க்கில் கொலை செய்யப்பட்ட யுவதி யுவோன் ஜோன்சனின் சகோதரி அப்போது தெரிவித்திருந்தார்.

இதேபோல், ஒரு நட்டஈட்டை மைத்ரி கடந்த வருடம் செலுத்தியிருந்தார். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 100 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, தவணை முறையில் வழங்கப்பட்ட இந்த இழப்பீட்டுத் தொகை கடந்த வருடம் ஓகஸ்ட் 16ஆம் திகதி முழுமையாகச் செலுத்தப்பட்டது.

செய்யும் தவறுகளையெல்லாம் செய்துவிட்டு பின்னர் நட்டஈடு செலுத்தினால் எல்லாம் சரியாகிவிடுமா? போன உயிர்கள்தான் திரும்பி வந்துவிடுமா? ஜனாதிபதியாக இருந்த காலத்தில் புலனாய்வுத் தகவல்களையெல்லாம் கிஞ்சித்தும் கணக்கெடுக்காமல் பாதுகாப்பமைச்சர் பதவிக்குரிய எந்தத் தகுதியுமின்றி கதிரையை சூடாக்கிய மைத்ரி அதே பதவிக்காலம் முடியும் தறுவாயில் கொலைகாரனுக்கு பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார். நல்லெண்ண அடிப்படையில் இந்தப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்க மாட்டாது என்பதும் இதன் பின்னணியில் டீல் எதுவும் நடந்திருக்கலாம் என்பதும் இரகசியமல்ல.

பணத்தை நட்டஈடாக வழங்கினால் செய்யப்பட்ட தவறுகள் சரியென்று ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மனச்சாட்சிக்கும் இறைவனின் சாட்சிக்கும் பயந்தவர்களால் இப்படித் தவறுகளைச் செய்துவிட்டு சுத்தவான்களாக நடந்து திரிய முடியாது. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தவர்கள் வாழ்நாளின் இறுதிக்காலத்தில் பட்ட துன்பம் கொண்ட வாழ்க்கையை எதிர்நோக்கியதை பல இடங்களில் கண்டிருக்கிறோம்.

தவறுகளைச் செய்துவிட்டு வெறுமனே நட்டஈடுகளால் அவற்றைச் சமாளிக்க நினைப்போரை சட்டத்துறை, நீதித்துறை கவனத்திற்கொண்டு அவர்கள் தொடர்பில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். ஜனாதிபதி கதிரையில் இருந்து அதிகாரத்தை வைத்து செய்த நிர்வாகத் துஷ்பிரயோகத்தால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்காக இலங்கையின் நற்பெயருக்கே களங்கம் ஏற்படுகிறது. நாட்டின் சட்டம்,ஒழுங்கு மீதே அவநம்பிக்கை ஏற்படுகிறது.சம்பந்தப்பட்டவர்கள் அதனைக் கவனத்தில் கொள்தல் வேண்டும்.

# உரிமைகளை நிலைநாட்ட முனைப்புக் காட்டுக!

**“ நாங்களும் இந்தியர்கள் தான் என உடைகளில் காட்டி பிரயோசனம் இல்லை. அதனை உரிமைகளை நிலை நாட்டுவதில் காட்டுங்கள் அல்லது உரிமைகளை நிலை நாட்டுவதில் முனைப்புக் காட்டுங்கள்”**

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும், புரையோடிப்போயுள்ள அரசியல் புண்ணுக்கு ஒரு சத்திர சிகிச்சை தேவை என்பதை உணர்ந்து அநுரகுமார திசாநாயக்கவுக்கு மக்கள் வாக்களித்தனர்.

அதில் மலையக மக்களும் விதிவிலக்கல்ல. அதேநேரம், நம்மவர்களின் பிரச்சினையை இனங்காண அல்லது இனங்கண்டிருப்பார்கள். எனவே, அவர்களும் பாராளுமன்றத்தில் இருப்பது அவசியமென்பதை உணர்ந்து ஒரேயடியாகத் துடைத்தெறிந்து விடாமல் இருந்தவர்களைத் திரும்பவும் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

தங்களின் இருப்பு, ஆட்டம் கண்டுள்ளதென்பதை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளாமல் தமக்கு அவர்கள் வாக்களிக்கவில்லை, இவர்கள் வாக்களிக்கவில்லையென்று சிலர் பேசித் திரிவதை நாம் அவதானிக்கின்றோம். என்ன இருந்தாலும், நாங்கள் தான் உங்களுக்கு நீங்கள் எங்களிடம் தான் வந்தாக வேண்டும். அப்போது உங்களை நன்கு கவனித்துக்கொள்கின்றோம் என்ற மிரட்டல் விடும் தொனியில் சிலர் நடப்பதையும் கண்டு வருகின்றோம்.

அதே நேரத்தில், இவ்வளவு காலமாக அரசியலில் கோலோச்சியவர்களின் குற்றங் குறைகளை மட்டுமே சுட்டிக்காட்டி அரச கட்டிலில் ஏறியவர்கள் சொன்ன சொல்லுக்கும் செயலுக்குமிடையில் பாரிய வித்தியாசத்தைக்காட்டி தமக்குள்ளிருந்த அதிகார ஆசையையும் சராசரி அரசியல் வாதத்தையும் பற்றிப்பிடித்திருப்பது தெளிவாகத் தெரிகின்றது என்பதையும் ஒரேயடியாக மறுப்பதற்கும் இல்லை. ஏனெனில், ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்காக தொழிற்சங்க பேதங்களை மறந்து ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுத்தபோது எம்மோடு இணைந்து செயற்பட்டவர்கள் பின்பு எம்மூடாகத் தளங்களை அமைத்து காலூன்றிக்கொண்டு இப்போராட்டப் பெறுபேறுகளை அரசியல் நகர்த்தலாக முன்னெடுத்தனர். இது மறுப்பதற்கில்லை. எத்தனையோ அரசியல் ஜாம்பவான்களை நாம் பார்த்திருக்கின்றோம்.

அவர்கள் உச்சத்திலிருந்தபோதும் கூட மிக இலகுவாக அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொள்ள முடிந்தது. ஆனால், இப்போது பெரும்பாலும் நாம் அழைப்புகளை மேற்கொள்ளும்போது அழைப்பு துண்டிக்கப்படுகின்றது. சில நேரங்களில் நான் கூட்டத்திலிருக்கின்றேன் பிறகு அழைக்கின்றேனென்றோ மிக அரிதாக மன்னிக்கவும் தோழரே! பிறகு அழைக்கின்றேன் என்றோ குறுஞ்செய்தி வருகின்றது. நாங்கள் அவசர விடயமாக அழைப்புகளை மேற்கொள்ளும்போது கிடைக்காத உதவிகள் பிறகெப்போதும் தேவைப்படாது. இத்தகைய ஓர் அரசியல் சூழ்நிலையைத் தோற்றுவித்துக் கொண்டதில் பொதுமக்களுக்கு மட்டுமல்ல, மலையக அரசியல்வாதிகளுக்கும் பெரும் பங்குண்டு.

கூஜா தூக்கிகளுக்கு தான் நீங்கள் முதலிடம் கொடுத்தீர்கள். உங்கள் வீட்டுக் கதவைத் திறந்து மூடுவதற்கு அதிகாரிகளைப் பயன்படுத்திக் கொண்டீர்கள். அதற்கு சன்மானமாக அவர்களுக்கு பொருத்தமில்லாத பதவிகளைப் பெற்றுக்கொடுத்தீர்கள். இளைஞர்களின் திறமைகளை இனங்கண்டு அவர்களுக்குரிய வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்காமல் கட்சி ரீதியாக அவர்களைப் பிரித்து வைத்தீர்கள். தகுதியானவர்களைத் தரம் பிரித்து அறிந்து அவர்களுக்கு உரிய இடங்களை வழங்காமல் தலையில் தட்டிவிட்டு உங்களுக்கு பெட்டி படுக்கைகளைச் சுத்தம் செய்பவர்களுக்கு பதவிகளை அள்ளிக்கொடுத்துள்ளீர்கள்.

மலையகத்து கல்வி இன்னமும் உரிய இலக்கை அடையாமல் இருப்பதற்கு நீங்கள் தான் முதல் காரணம். நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து வலயங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் அவை இனத்துவ அடிப்படையிலேயே பிரிக்கப்பட்டிருக்கின்றன. மாகாணக் கல்வி அமைச்சர்களாக நம்மவர்கள் தான் இருந்திருக்கின்றோம். கல்வி இராஜாங்க அமைச்சர்களாகவும் நம்மவர்கள் தான் இருந்திருக்கின்றோம். பலம் பொருந்திய அமைச்சர்களாக அமைச்சரவையிலும் இடம் பிடித்திருக்கின்றோம். ஆனால், இன்னமும் நம்முடைய மலையக மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக, அதிகளவான பேரம் பேசும் அரசியல்வாயிலாகத் தான் வெற்றி பெற முடியும்.

ஆகவே, எங்களை அதிக எண்ணிக்கையில் வெற்றிபெறச் செய்யுங்கள் என்று மக்களிடம் ஒரு முகத்தைக் காட்டி விட்டு அரசியல் ரீதியாக தம் பைகளை நிரப்பிக் கொள்ளும் பேரம் பேசுதல்களைச் செய்கின்ற இன்னொரு முகத்தை ஆட்சியாளரிடம் காட்டுகின்ற அரசியல் நரித்தனத்தால் இன்று நம் சமூகம் வீழ்த்தப்பட்டிருக்கிறது. பாடசாலைக்கு இருக்கின்ற கட்டிடத்தையும் இடித்து தரைமட்டம் ஆக்கிவிட்டு இன்று அவ்விடத்தில் புதிய மண்டபம் ஒன்றைக் கட்ட முடியாமல் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். தவித்துக் கொண்டிருக்கின்றனர். அதைப் பற்றிய கவலை கிஞ்சித்தும் உங்களுக்கு இல்லை.

எல்லை மீள் நிர்ணயம் செய்து பிரதேச சபைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் நீங்கள் காட்டிய அக்கறையும் ஆர்வமும் கல்வி வலயங்களை அதிகரித்து அதன் மூலம் தமிழர்களுக்கான உரிமைகளையும் அதிகாரங்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு முனையவில்லை என்பது கண்கூடு. மாணவர்களின் இடைவிலகலைத் தவிர்த்துக் கொள்வதற்காக அவர்களுக்கு போதிய வசதி வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் புதிய கல்விக்கூடங்களை அமைப்பதற்கும் நீங்கள் இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டீர்கள் என்பது உங்களுக்கே தெரியும். கல்வி இராஜாங்க அமைச்சினூடாக நிதியளிக்கப்பட்டு கட்டப்பட்ட கட்டிடங்களை யார் திறப்பதென்பதில் மாகாணக் கல்வியமைச்சுக்கும் கல்வி இராஜாங்க அமைச்சுக்கும் போட்டி நிலவி வந்ததே தவிர, பூட்டிக் கிடக்கின்ற பாடசாலைகளைத் திறந்து அதனை வளப்படுத்துவதற்கு போட்டிகள் வரவில்லை.

நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்ற தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான பாடசாலைகளின் எண்ணிக்கைகளாவன,

01. நுவரெலியா கல்வி வலயம் - 131 தமிழ் பாடசாலைகள், 30 சிங்களப் பாடசாலைகள்.

02. ஹட்டன் கல்வி வலயம் - 115 தமிழ் பாடசாலைகள், 31 சிங்களப் பாடசாலைகள்.

03. வலப்பனை கல்வி வலயம் - 30 தமிழ் பாடசாலைகள், 89 சிங்களப் பாடசாலைகள்.

04. கொத்மலை கல்வி வலயம் - 42 தமிழ் பாடசாலைகள், 43 சிங்களப் பாடசாலைகள்.

05. ஹங்குராங்கெத்த கல்வி வலயம் - 12 தமிழ் பாடசாலைகள், 69 சிங்களப் பாடசாலைகள்.

ஐந்து கல்வி வலயங்களில் கொத்மலை, வலப்பனை, ஹங்குரான்கெத்த தவிர்ந்த நுவரெலியா, ஹட்டன் ஆகிய இரண்டு வலயங்கள் மட்டுமே அதிகளவான தமிழ் மொழி மூல பாடசாலைகளைக் கொண்ட வலயங்களாகும். ஆனால், எந்தவிதமான நிர்வாக அதிகாரங்களும் தமிழதிகாரிகளிடம் இல்லை. ஹட்டன் வலயத்துக்கு மிக நீண்ட காலத்துக்குப் பின் தமிழர்கள் நியமிக்கப்பட்ட போதும் கூட நிர்வாகச் செயற்பாடு முழுக்க முழுக்க சிங்கள மொழியிலேயே இருப்பது மட்டுமல்லாமல், அந்நியமனம்கூட அரசியல் சார்ந்ததாகவும் சில அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவும் மாத்திரமே இந்நியமனங்கள் பயன்படுத்தப்பட்டன.

நுவரெலியா கல்வி வலயத்தில் அதுவும்கூட, அதைவிட ஏனைய வலயங்களில் இன்னும் நிலைமை மோசமானதாகும். ஒருசிலரைத் தவிர ஏனையோர் தமக்கு கிடைத்த கதிரையைக் காப்பாற்றிக்கொண்டு கிடைத்தவரை எதையாவது பெற்றுக்கொண்டு பெரும்பான்மையோடு இணங்கிச் செல்லும் போக்கையே கையாளுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நம் உரிமைக்காக நாம் குரலெழுப்பினாலும் பெரும்பான்மையினர் எதிர்க்க முன் எடுத்துக்கொடுத்து சதி சொல்வதும் இவர்களாகத்தானிருக்கும் போது எம் உரிமைகளை நாம் எப்படி வெல்வது? மிக ஒரு சில அதிகாரிகளே உரிமைக்காக உதவி செய்வதில் முனைப்புக் காட்டுகின்றார்கள். ஏனையோர் சமூகத்துக்கு விசுவாசமாக இருப்பதை விட நிர்வாகத்துக்கு விசுவாசமாக இருந்தால் தான் ஓய்வூதிய கோப்புகள் ஒழுங்காக இருக்குமென எண்ணுகின்றார்கள்.

ஆனால், உங்களுக்கு பதவிகளைப் பெற்றுத்தந்தவர்கள் இவர்களைப் போன்றவர்களுக்கு பதவிகளைப் பெற்றுத்தந்துவிட்டால் தமது ஆடுகளத்தில் தடைகள் இல்லாமல் துப்புரவாக வைத்துக்கொள்வார்கள் என எண்ணுகின்றார்கள். அத்தகைய அதிகாரிகள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். உங்களைக் கழுதையாக்கி உங்கள் முதுகில் அழுக்கு மூட்டையை ஏற்றி வைத்திருக்கின்றார்கள். ஆனால், நீங்களோ உங்களைப் பந்தயக் குதிரையாக எண்ணிக்கொண்டது மட்டுமல்லாமல் கொம்புவேறு இருப்பதாக எண்ணிக்கொண்டு தலையைச் சிலுப்பிக்கொண்டு ஓடுகின்றீர்கள்.

வலுவற்ற மத்திய மாகாண மேலதிக தமிழ் கல்விப் பணிப்பாளர் பதவியென்பது ஒரு ஒப்பேற்றும் பதவி. அதனை நிரந்தரப்படுத்தி உரிய அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு எவர் என்ன செய்திருந்தார் என்பதை உற்று நோக்குங்கள். இவ்வளவுக்கும் மாகாணக் கல்வியமைச்சு, கல்வி இராஜாங்க அமைச்சு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சு என பதவிகளை வகித்தவர்களால் அரசியல் சாயமில்லாமல் தமது மாவட்டங்களிலுள்ள கல்வி வலயங்களிலாவது தமிழ் மொழியையும் நிர்வாக மொழியாக முன்னெடுக்க முடியவில்லை.

அரசியலமைப்பு ஏற்பாடுகளின் படி அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல் தொடர்பாக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு உறுப்புரையின் iv அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது iv அத்தியாயத்தின் 27ஆம் உறுப்புரையின் (05, 06, 10) பிரிவில் காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப 1978 ஆம் ஆண்டு உறுப்புரையின் அடிப்படைச் சட்டமானது 1987 ஆம் ஆண்டு 13 ஆம் திருத்தம் மூலமாகவும் 1988 ஆம் ஆண்டு 16 ஆம் திருத்தச் சட்டமூலமாகவும் மொழி உரிமைகளின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மொழி உரிமையானது மனித உரிமையாகப் பாதுகாக்கப்பட வேண்டிய நிலைமை அரசியலமைப்பு உறுப்புரையின் iii ஆவது அத்தியாயத்தில் 12(2) மற்றும் 12(3) பிரிவில் காட்டப்பட்டுள்ளது.

‘’ இவ்வத்தியாயத்தில் மொழிப் பாவனை தொடர்பாகப் போதுமான வசதிகள் அரசால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (25 ஆம் பிரிவு ) இப்படியான தெளிவுரைகள் இருந்தபோதும் கூட தமிழ் மொழியில் ஒரு பதிலை வலயத்திலிருந்து பெற்றுக்கொள்வது பெரும் குதிரைக்கொம்பாகத் தான் இருக்கின்றது.

கட்சி யார் ஆள் யார் என்பதைத் தாண்டி நம் உரிமைகளுக்காக நம் மொழிப் பயன்பாட்டுக்காக எவரொருவர் உண்மையாக உழைப்பார் என நீங்கள் எண்ணுகின்றீர்களோ அவருக்கு இவ்வுள்ளூராட்சி மன்றங்களில் வாக்களியுங்கள். உள்ளூராட்சி மன்றம் என்பது நம் சொந்தச் சபை. அதனை தாரைவார்த்துக்கொடுத்து விடவேண்டாம்.

தாடி வைத்தவர் எல்லாம் தாகூருமல்ல, கையில்லாச் சட்டை போட்டவரெல்லாம் மோடியும் அல்ல வெட்டிப் பேச்சுகளுக்கும் அட்டைக் கத்திகளுக்கும் ஆர்ப்பரிக்காமல் சுயமாகச் சிந்திப்போம்.

**சின்னையா இரவீந்திரன்,**
**செயலாளர்,**
**மலையக ஆசிரியர் முன்னணி.**

## இன்றைய நாளில்...

- **1753 – தாவரவியல் பெயரிடலுக்கான அனைத்துலக நெறிமுறையால் தாவர வகைப்பட்டியல் அறிமுகப்படுத்தப்பட்டது.**
- **1776 – இல்லுமினாட்டி குழுமம் ஆரம்பிக்கப்பட்டது.**
- **1834 – பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.**
- **1840 – உலகின் முதலாவது அதிகாரபூர்வ ஒட்டக்கூடிய தபால்தலையான பென்னி பிளாக், ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்பட்டது.**
- **1886 – ஐக்கிய அமெரிக்காவில் 8 மணிநேர வேலை நாளை அறிவிக்க வேண்டி வேலைநிறுத்தம் ஆரம்பமானது. இந்நாள் பின்னர் மே தினம் எனவும் தொழிலாளர் தினம் எனவும் உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.**
- **1930 – குறுங்கோள் புளூட்டோவின் பெயர் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.**
- **1956 – யோனாஸ் சால்க்கினால் தயாரிக்கப்பட்ட போலியோ தடுப்பூசி பொதுமக்களின் பயன்பாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.**
- **1960 – இந்தியாவில் குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்கள் அமைக்கப்பட்டன.**
- **1978 – ஜப்பானியரான நவோமி யூமுரா, தன்னந்தனியாக வடமுனையை அடைந்த முதல் மனிதர் என்ற சாதனையைப் படைத்தார்.**
- **1989 – இந்திய அமைதி காக்கும் படையின் வவுனியா சிறையை உடைத்து விடுதலைப் புலிகளும் பொதுமக்களுமாக 43 பேர் தப்பி வெளியேறினர்.**
- **1993 – ஜனாதிபதி ஆர்.பிரேமதாச மே தினப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுத்தாக்குதலின் மூலம் கொல்லப்பட்டார். டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**
- **2011 – அல்-குவைதா தலைவர் ஒசாமா பின் லேடன் ஐக்கிய அமெரிக்கக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

## நக்கல் நமசிவாயம்

***தொழிலாளர் தினத்தன்று மதுக்கடைகளை பூட்டி அவர்களை கவலைப்படுத்தியிருக்குது அரசாங்கம்...***



# நாட்டில் முதல் 04 மாதங்களில் 17,000 டெங்கு நோயாளர்கள் பதிவு

## மேல் மாகாணத்தில் 46 வீதம் அதிகரிப்பு

நாட்டில் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 17,000க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் இது சடுதியான அதிகரிப்பை காட்டுவதாகவும் சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேல் மாகாணத்திலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் இது 46% அதிகரிப்பைக் காட்டுவதாகவும் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இந்த ஆண்டு 17 ஆயிரத்து 459 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் டெங்கு பாதிப்பால் ஆறு பேர் உயிரிழந்துள்ளதாகவும் சமரவீர குறிப்பிட்டார்.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் மொத்தம் 5,018 டெங்கு நோயாளர்கள் நாடளாவிய ரீதியாக பதிவாகியுள்ளதாகவும் இரத்தினபுரியில் மாத்திரம் 985 பேர் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் இருந்தால் பொதுமக்கள் 24 மணி நேரத்துக்குள் மருத்துவரை அணுகி மருத்துவ உதவியை நாடவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவுவதைத் தடுக்கவும் சமூக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யவும் நுளம்புகள் பெருகும் இடங்களை சுத்தம் செய்யுமாறும் சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்துகின்றனர்.



# 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு முன்னாயத்த செயலமர்வு



(பு.கஜிந்தன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக, வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று (30) காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், எதிர்வரும் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக, தேர்தல் நடைமுறைகள் ஒன்றாக காணப்பட்டாலும் வாக்கெண்ணல் செயற்பாடு வட்டார நிலையங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களே வட்டாரத்தின் பிரதம வாக்கெண்ணும் அலுவலர்களாகவும் பெறுபேறுகளை வெளியிடும் அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளதால், வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கடமைகளை சரியான அறிவுறுத்தல்களைப் பின்பற்றி வினைத்திறனாக மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் தேர்தல் கடமைகளில் நேர முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது எனவும் தேர்தலை நடத்தும் பொறுப்பு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரைச் சார்ந்திருப்பதால் சரியான முறையில் கண்காணிப்புகளை மேற்கொள்ளுமாறும், 05ஆம் திகதி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று சரியான முறையில் வாக்களிப்பு நிலையங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுடன், தேர்தலில் வாக்களிப்பு வீதங்களையும் குறிப்பிட்ட நேரங்களில் உடனுக்குடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இயங்கும் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அறிக்கையிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், தபால்மூல வாக்கெண்ணும் நிலையங்களுக்குரிய செயற்பாடுகள் தொடர்பாகவும் தெரிவித்து, நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற்றதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக வட்டாரத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் பிரதம வாக்கெண்ணலுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாகவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ.சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணல் நிலையங்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரும் போக்குவரத்து ஒழுங்குகளுக்கு பொறுப்பாகவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான எப்.சி. சத்தியசோதி தெளிவுபடுத்தினார்.

தேர்தல் கட்டுபாட்டுப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பாக மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளரும் கட்டுப்பாட்டுப் பிரிவின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். ரமேஷ்குமார் விளக்கமளித்தார்.

இக்கலந்துரையாடலில் வட்டாரத்துக்கு பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# காலத்துக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கி பயணித்தால்தான் முன்னோக்கிச் செல்லமுடியும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து





(பு.கஜிந்தன்)

''காலத்துக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கிப் பயணித்தால்தான் முன்னோக்கிச் செல்ல முடியும் என்பதை கூட்டுறவுத்துறையினர் உணர்ந்துகொள்ளவேண்டும்'' என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியீட்டத்தின் கீழ் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் அமைக்கப்பட்ட கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நவீன போத்தல்கள் அடைப்பு நிலைய திறப்பு விழா நேற்று (30) வரணி, நாவற்காட்டில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கத்தின் நிலையத்தில் நடைபெற்றது.

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு நிலையத்துக்கான நினைவுக்கல் ஆளுநர், பிரதம செயலர் ஆகியோரால் திறந்துவைக்கப்பட்ட பின்னர் நிலையம் நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது. அதன் பின்னர் போத்தல்கள் அடைக்கும் நிலையத்தின் செயற்பாடுகளை ஆளுநர் பார்வையிட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற மேடை நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன், ''கடந்த காலங்களில் மிதமிஞ்சிய கள்ளை நிலத்தில் ஊற்றும் நிலைமை காணப்பட்டது. பின்னர் அதனை மதுசார உற்பத்திக்காக இவர்கள் வழங்கினர். அதன்போது போத்தலுக்கு 40 ரூபாவே இவர்களுக்கு கிடைத்தது. இதனை மாற்றியமைத்து அவர்களுக்கான வருவாயை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்தப் போத்தல்கள் அடைக்கும் நிலையம் அமைத்து வழங்கப்பட்டுள்ளது. இதிலுள்ள இயந்திரங்களும் இந்தச் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அவர்களுக்கு ஏற்ற வடிவில் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் தனதுரையில், கூட்டுறவுத்துறையில் வடக்கு மாகாணமே ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தது எனக் குறிப்பிட்டார். அத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குக் கிடைத்த சொத்துகளைப் பராமரிக்க வேண்டும் எனவும் இந்தச் சங்கம் அதற்கு முன்மாதிரியாகவும் செயற்படும்'' என எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

பிரதம விருந்தினர் உரையாற்றிய ஆளுநர், ''கூட்டுறவுத்துறையில் வடக்கு மாகாணமே ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணமாக ஒரு காலத்தில் விளங்கியது. ஆனால் போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அதில் பின்னடைவு ஏற்பட்டுவிட்டது.

பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னமும் மீண்டு வரமுடியாமல் இருக்கின்றன. ஆனால் உங்களைப் போன்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகவே செயற்படுகின்றன. நான் தெல்லிப்பழையில் பிரதேச செயலராக இருந்தபோதும் யாழ்ப்பாண மாவட்டச் செயலராகக் கடமையாற்றியபோதும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்காக பல்வேறு இயந்திரங்களைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றேன்.

இன்று உங்களின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்றுமதியாளர் தயாராக இருக்கின்றார். நீங்களும் ஏற்றுமதியை நோக்கி உங்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். உற்பத்தியாளர்களுக்கு தமது உற்பத்திப் பொருட்களுக்கு கூடிய விலை கிடைக்கும்போதுதான் அவர்கள் அந்த உற்பத்தியை தொடர்ந்து முன்னெடுப்பார்கள். எனவே நீங்களும் எதிர்காலத்தில் நவீன கருவிகளை உள்வாங்கி உங்கள் உற்பத்தியை அதிகரித்து அதனூடாக உங்கள் ஒவ்வொருவரது குடும்பங்களின் வாழ்வாதாரமும் மேம்பட வாழ்த்துகின்றேன்'' என்றார்.

# இலங்கை - பாகிஸ்தான் இருதரப்பு பாதுகாப்பு உரையாடல்





இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான உறுதிப்பாட்டைக் குறிக்கும் வகையில், 5ஆவது வருடாந்த இலங்கை - பாகிஸ்தான் இருதரப்பு பாதுகாப்பு உரையாடல் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் தொடங்கியது.

இலங்கைக் குழுவுக்கு பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வு) தலைமை தாங்குகிறார். கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (பாதுகாப்பு) ஜயந்த எதிரிசிங்க ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

அதேபோன்று, பாகிஸ்தான் குழுவுக்கு பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் பாதுகாப்புச் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் முஹமது அலி (ஓய்வு) தலைமை தாங்குகிறார்.

நடைபெற்ற வரும் பாதுகாப்பு உரையாடலுடன் இணைந்ததாக, எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வு) நேற்று முன்தினம் (29) பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் குவாஜா முஹம்மது ஆசிஃப் உடன் சந்திப்பு நடத்தினார்.

இந்த உயர்மட்ட ஈடுபாடுகள் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல், பிராந்திய பாதுகாப்பு செயற்பாடுகள் குறித்த பரஸ்பர புரிதலை வளர்ப்பது மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இரு நாடுகளும் பரஸ்பர மரியாதை மற்றும் மூலோபாய ஒத்துழைப்பில் வேரூன்றிய நீண்டகால உறவைப் பகிர்ந்து கொள்கின்றன. தெற்காசிய பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையைப் பேணுவதிலும் அமைதியை மேம்படுத்துவதிலும் கூட்டாண்மைகளின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை இந்த உரையாடல் பிரதிபலிக்கிறது.

இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் மற்றும் பரந்த பிராந்திய பாதுகாப்பு நோக்கங்களுக்கு இந்த உரையாடல் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உள்ளூராட்சித் தேர்தல் விதிமீறல்கள்

## இதுவரை 3,646 முறைப்பாடுகள் பதிவு

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், இதுவரை 3,646 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 24 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 182 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அது 3,393ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில், இதுவரையான முறைப்பாடுகளில் 3,038 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 608 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.


Election Commission
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இலக்கம் : LAE/2025/78 2025.04.30

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
தேர்தல் முறைப்பாட்டு சாரம்சக் குறிப்பு

கடந்த 24 மணி நேரத்திற்குள் (2025.04.29 பி.ப. 04.30 வரை) தேர்தல் முறைப்பாட்டு சாரம்சக் குறிப்பு

| முறைப்பாடு கிடைத்தல் | வன்முறைச் சம்பவங்கள் | சட்டத்தினை மீறுதல் | வேறு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 00 | 17 | 00 | 17 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 00 | 160 | 05 | 165 |
| நாளாந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 00 | 177 | 05 | 182 |

2025.03.20 ஆம் திகதி தொடக்கம் 2025.04.29 ஆம் திகதி வரை அறிக்கையிடப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் சாரம்சக் குறிப்பு

| முறைப்பாடு கிடைத்தல் | வன்முறைச் சம்பவங்கள் | சட்டத்தினை மீறுதல் | வேறு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 01 | 311 | 39 | 351 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 23 | 3082 | 190 | 3295 |
| மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 24 | 3393 | 229 | 3646 |

2025.03.20 ஆம் திகதி தொடக்கம் 2025.04.29 ஆம் திகதி வரை நிலை

| விபரம் | முறைப்பாடு கிடைத்தல் | முறைப்பாடுகளை தீர்த்தல் | நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 351 | 237 | 114 |
| மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் | 3295 | 2801 | 494 |
| மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 3646 | 3038 | 608 |

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (30.04.2025)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 186.9017 | 196.6037 |
| கனேடியன் டொலர் | 211.9751 | 220.7745 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.7854 | 42.3359 |
| யூரோ | 334.1261 | 347.1497 |
| ஜப்பான் யென் | 2.0644 | 2.1439 |
| சிங்கப்பூர் டொலர் | 224.1144 | 233.9726 |
| ஸ்ரேலிங் பவுன் | 394.0665 | 408.3857 |
| சுவிஸ் பிராங் | 355.6453 | 371.8471 |
| ஐ.அ. டொலர் | 295.3908 | 303.7534 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 794.8160 |
| குவைட் | குவைட் தினார் | 978.2930 |
| ஓமான் | ஓமான் றியால் | 778.2485 |
| கட்டார் | கட்டார் றியால் | 82.1929 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.8800 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.5719 |

# வெலிக்கடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த இளைஞன் விவகாரம்

## ஐந்து சாட்சியாளர்களை 16ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

வெலிக்கடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்ததாக கூறப்படும் 26 வயதுடைய நிமேஷ் சத்சர என்ற இளைஞனின் மரணம் தொடர்பான சாட்சியங்களின் விசாரணைகளை, மே 16ஆம் திகதி முதல் ஆரம்பிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (30) உத்தரவிட்டது.

அதன்படி, சம்பந்தப்பட்ட விசாரணையில் சாட்சியமளிக்க அன்றைய தினம் 05 சாட்சியாளர்களை நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை விடுக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கையை பரிசீலித்த பின்னர் கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட முந்தைய உத்தரவின்படி, இறந்த இளைஞனின் உடல் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

அதன்படி, மூவர் அடங்கிய வைத்திய நிபுணர் குழுவால் அந்த சடலத்தை மீண்டும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியதாகவும் அதன் முதற்கட்ட அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த பிரேத பரிசோதனையின்போது எடுக்கப்பட்ட இறந்தவரின் உடலின் சில பாகங்கள் பிரதான சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, இந்த மரணம் தொடர்பான நீதவான் விசாரணையின்போது 22 சாட்சியாளர்களிடமிருந்து சாட்சியங்களைப் பதிவுசெய்ய எதிர்பார்ப்பதாகவும் அதில் 05 சாட்சியாளர்களுக்கு அடுத்த வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நீதிமன்றத்தைக் கோரினர்.

இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்த நீதவான், அந்த சாட்சியாளர்களை எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

# இரத்தினபுரியில் தீவிரமடையும் டெங்கு: விரைவில் கட்டுப்படுத்த நடவடிக்கை

## ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தெரிவிப்பு



(இரத்தினபுரி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு தொற்று தீவிரமடைந்து வருவதாக அறியக் கிடைத்ததையடுத்து அதனைக் கட்டுப்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுத்துள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் குறித்து நேற்று முன்தினம் (29) சப்ரகமுவ மாகாண சபைக் கட்டிடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளுநர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் அண்மித்த பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டிடத் தொகுதியிலிருந்து டெங்கு தொற்று பரவியுள்ளதன் காரணத்தால் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட சேவையாளர்கள் அதிகமானோருக்கு டெங்கு தொற்று பரவியுள்ளது.

இதைக் கருத்திற்கொண்டு முதலில் மேற்படி வைத்தியசாலை வளாகத்தில் விரைவில் டெங்குத் தொற்றை ஒழிப்பதற்காக குருவிட்ட இராணுவ முகாமிலிருந்து 80 இராணுவத்தினரை அழைத்து அவர்களின் உதவியுடன் கடந்த 26ஆம் திகதி இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சுற்றுச்சூழல் முழுவதும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாம் இராணுவத்தினருக்கு அழைப்பு விடுத்தவுடன் இராணுவத்தினர் விரைந்து டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்ததையிட்டு இராணுவத்தினருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் பாடசாலைகள் மற்றும் கிராமப்புறங்கள், நகர்ப்புறங்கள், தோட்டப் புறங்களிலும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அதிகமான தாதியர்களுக்கு டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளதால் மேற்படி வைத்தியசாலையில் பயிற்சியை நிறைவு செய்த தாதியர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்களிடம் நாம் கேட்டுக்கொள்ளும் விடயமானது, தத்தமது இல்லங்களின் சுற்றுச் சூழலை துப்புரவாக வைத்துக்கொள்ளுங்கள்.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்வோமென்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன மேலும் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்களின் வருகை தடுக்கப்படும்

## நெடுந்தீவில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு





"இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் இலங்கை கடற்படையினருக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது" - இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். நெடுந்தீவு பகுதிக்கு நேற்று முன்தினம் (29) பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் தமது வாழ்வாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் அமைச்சரிடம் மீனவர்கள் எடுத்துரைத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதற்கு நிரந்தரப் பாதுகாப்பு பொறிமுறையொன்று அவசியமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதற்குரிய இராஜதந்திர நடவடிக்கை உட்பட அனைத்து விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் கடற்படையினருக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் இறங்குதுறைப் பிரச்சினை சம்பந்தமாகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் உறுதியளித்தார்.

அதேவேளை, நெடுந்தீவு மக்களுடனும் அமைச்சர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது நெடுந்தீவு அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.



'தமிழன்' பத்திரிகை மற்றும் அம்ரிதா ஊது பத்திகளின் அனுசரணையில் திருப்பதிக்கான புனித யாத்திரைப் பயணத்தில் 10 பக்தர்கள் திருப்பதிக்கு பயணமான நிலையில், நேற்று (30) இரண்டாம் நாளாகவும் தமது யாத்திரையைத் தொடர்ந்தனர்.



ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான லிலந்த பெரேரா, சாகர ரட்நாயக்க மற்றும் வேட்பாளர்கள் ஒன்றிணைந்து அக்கட்சியின் கொழும்பு - 15 முகத்துவாரத்துக்கான தேர்தல் காரியாலயத்தை வைபவ ரீதியாக அண்மையில் திறந்துவைத்தனர். இந்நிகழ்வில் வேட்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். (படம் :எம்.நசார்)

கொழும்பு விவேகானந்தா கல்லூரி
VIVEKANS NETBALL LEAGUE

நூற்றாண்டு விழாவை நோக்கிய பயணத்தில்
மகளிர் தினத்தை முன்னிட்டு

பழைய மாணவிகளுக்கிடையிலான
மாபெரும் வலைப்பந்தாட்ட போட்டிகள்



பங்கேற்கும் அணிகள்
- காளஸ்திகா
- ருத்ரா
- ஆர்யா
- வேலு நாச்சியார் படை
- நிலாம்பரி

இடம்
கொழும்பு விவேகானந்தா கல்லூரி மைதானம்

திகதி
04.05.2025

நேரம்
8.00 மணி முதல்

மாபெரும் இறுதிப் போட்டி அடங்கலாக மொத்தம் 13 போட்டிகள்

ஊடக அனுசரணை
அச்சு ஊடகம் - தமிழன் - தமிழன் - ஜூனியர்
இலத்திரனியல் ஊடகம் - தமிழ் 99.5 99.7

# உழைக்கும் வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால்தான் உலகமே மகிழ்ச்சியாக இருக்கும்

## இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் மே தின வாழ்த்து



உழைக்கும் வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால் தான் உலகமே மகிழ்ச்சியாக இருக்கும். உலகத் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்ததன் அடையாளமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட மே தினத்தைக் கொண்டாடும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, "உலகின் பல்வேறு நாடுகளிலும் பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற உரிமைகள் மற்றும் வெற்றியைக் கொண்டாடும் முகமாக மே மாதம் முதலாம் திகதியை உலகத் தொழிலாளர்கள் நாளாகக் கொண்டாடுகிறோம்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள் தான். பாட்டாளி வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால்தான் நாடு வளர்ச்சியடையும். இலங்கையில் பல நூற்றாண்டுகளாகத் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

காலனித்துவ ஆட்சிக்காலம் முதல் சுதந்திர இலங்கையிலும் கூட கடுமையான போராட்டங்கள் ஊடாகவே தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்ததுடன் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களும் பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்டன.

அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் தொழிலாளர்களின் உரிமைகளையும் நலனையும் அடிப்படையாகக் கொண்டே அனைத்து சந்தர்ப்பங்களிலும் செயற்பட்டுள்ளனர். அதேவழியில் இ.தொ.கா. தொடர்ந்தும் பயணம் செய்யும். தொழிலாளர்களுக்காக எமது தொழிற்சங்க ரீதியான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை நாம் உறுதி செய்யும் அதேவேளை, அவர்களின் வாழ்வாதார உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மே தினமும் மலையகமும்





இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் வரலாற்று ரீதியில் பல்வேறு தொடர்புகள் காணப்படுகின்றன. அதாவது வணிகம், கலை, கலாசாரம் போன்றவற்றைப் பொதுவாகக் குறிப்பிடலாம். அவற்றுள் வரலாறு மறக்கமுடியாத விடயமாகக் கருதப்படுவது இந்தியாவிலிருந்து இலங்கையின் மத்திய பிரதேசத்துக்கு தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டமை. உலகத்தில் மறைக்கப்பட்ட, இரத்தக்கறை படிந்த வரலாறுகளில் ஒன்றாகவும் இதனைக் குறிப்பிடலாம்.

மலையக மக்களென அடையாளப்படுத்தப்படும் இவர்களின் வரலாறு 200 ஆண்டுகள் கடந்த போதிலும், இதுவரையும் மாற்றங்கள் அற்றதாகவே காணப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பாரிய பஞ்சமும் அதே காலப் பகுதியில் அதாவது, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் மலைநாட்டில் ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக் குறையும் மலையக மக்களின் வரலாற்று வருகையை ஏற்படுத்தின. 1820ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இலங்கையில் பெரும்பாலும் கோப்பி பயிர்ச்செய்கையே காணப்பட்டது. இதன் வீழ்ச்சி காரணமாக 1824 க்குப் பிறகு 'ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இது பெரும் வெற்றியைக் கண்டதும் தேயிலை பிரதான வர்த்தகப் பயிராகக் மாறியது. இதன் அறுவடைக்கு பெருமளவு தொழிலாளர் பட்டாளம் தேவைப்பட்டது. எனவே, அக்காலப் பகுதிகளில் இலங்கையில் தேயிலை அறுவடைக்கான தொழிலாளர்கள் குறைவாகவே காணப்பட்டனர். எனவே, இந்தியாவின் தமிழ்நாட்டில் ஏற்பட்ட பஞ்சமும் இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கையின் வெற்றியும் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் இலங்கைக்கு கப்பல் மூலம் அழைத்து வர நேர்ந்தது.

இலங்கையின் கன்னிக்காட்டை நோக்கிய துயரப் பயணம்.அதாவது, தற்போது நாம் காணும் தேயிலைத் தோட்டங்கள் யாவுமே காடுகளாகவும் அடர்ந்த மலைப் பிரதேசங்களாகவுமே காணப்பட்டன. இந்தக் காடுகளை அழித்து விளைச்சல் நிலமாக்கி தேயிலைப் பயிர்ச்செய்கையை மேற்கொண்ட பெருமை இந்திய வம்சாவளியினரையே சாரும்.

இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் நடைப் பயணங்களினூடாக மக்கள் தனுஸ்கோடியை அடைந்துள்ளனர். இவர்கள் இங்கிருந்து பாக்குநீரிணையூடாக தோணிகள், கப்பல்கள் மூலம் தலைமன்னாரை வந்தடைந்துள்ளனர். இவ்வாறு பயணம் செய்தவர்களில் சுகவீனமுற்றவர்களையும் நடக்க முடியாதவர்களையும் இடையிலே தங்கவைத்துவிட்டு தமது பயணத்தைத் தொடர்ந்தனர். இவர்கள் கொடிய மிருகங்களுக்கு பலியானதும் வரலாறுகளில் உண்டு. அத்துடன், கப்பல்களில் இவர்கள் அழைத்து வரும்போது கடலுக்கு இரையானவர்கள் தான் எத்தனைபேர். 1815 பெப்ரவரி 05ஆம் திகதி இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி வந்த ஆதிலக்ஷ்மி என்ற கப்பல் 110 பயணிகளுடன் கடலில் மூழ்கியமையும் இரத்தக் கறைபடிந்த வரலாற்றில் மறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும். இத்தனை இன்னல்களை கடல் பயணத்தில் கடந்து வந்தவர்கள் இலங்கையின் தலைமன்னாரை அடைந்தனர். இவர்கள் இங்கிருந்து கால்நடைப் பயணமாகவே கண்டியைச் சென்றடைந்தனர். இவர்களின் பயணமானது கரடு முரடான பகுதிகளிலேயே தொடர்ந்தது. இதன்போதும் இவர்கள் அனுபவித்த கொடுமைகள் எண்ணிலடங்காதவை.

இவ்வாறு வந்த தொழிலாளர்கள் மலைப்பாங்கான பிரதேசங்களிலேயே குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு லயன் குடியிருப்புகளே பெரும்பாலும் அமைத்துக்கொடுக்கப்பட்டன. இவர்களின் வீடு எனும்போது 10 – 12 சதுர அடி கொண்ட அறை ஆகும். இந்த அறையே ஒரு குடும்பம் வாழும் வீடாகக் கருதப்படுகின்றது. 8 க்கும் மேற்பட்ட வீடுகளைக் கொண்ட தொகுதி ஒரு லயனாகக் கருதப்படுகிறது. எனவே, மலையகத்தில் பெரும்பாலும் லயன் குடியிருப்புகளே காணப்படுகின்றன.

மலையகத்தில் வாழ்வாதாரப் பயிராக தேயிலையே காணப் படுகின்றது. நாட்டுக்கு பெருமளவான அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் பயிரும் தேயிலையே. பொதுவாக தேயிலை பறிப்பதற்கு பெண் தொழிலாளர்களே அதிகளவு ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை தமது முதுகில் சுமக்கின்றனர் என்றால் அது மிகையாகாது. பெண் தொழிலாளர்களை அதிகளவு கொண்ட பிரதேசமாக மலையகப் பிரதேசம் காணப்படுகின்றமை குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

அடிப்படை வசதிகளற்ற மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் சூழலானது இரு நூற்றாண்டுகளைக் கடந்தும் மாற்றங்கள் இல்லை எனலாம். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு கால நேரம் பார்க்காமல் உழைக்கும் எம் மலையக மக்களின் வாழ்க்கைத் தரம் நாட்டின் ஏனைய பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. தனி வீடமைப்புத் திட்டம் மலையகத்தின் ஒருசில பகுதிகளிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றம் பெற்ற மலையகம் இந்தத் தொழிலாளர் தினத்திலாவது மலருமா? அரசியல் ஆளுமைகளே சற்று ஆழமாக சென்று பாருங்கள். குடிநீரற்று ஏங்கும் பிரதேசங்கள் எத்தனை உள்ளன. சுகாதார வசதிகளற்று உள்ள பிரதேசங்கள் எத்தனை உள்ளன என்று. ஒவ்வொரு விடியலும் தன் குடும்பத்துக்கானது என்று கொழுந்துக் கூடுகளை தோளில் சுமக்கும் தொழிலாளர்களின் விடிவு தான் எப்போது? இவர்களின் பழைமையான தொடர் குடியிருப்புகள் அகற்றப்பட்டு தனி வீடுகள் எப்போது அமைத்துக் கொடுக்கப்படும். இன்னும் ஓர் நூற்றாண்டை இன்னல்களுடன் கடக்க வேண்டுமா? இது இவர்களின் தலைமுறை சாபமா? இதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கப் போவது யார்? மாற்றமிகு மலையகத்தை நோக்கிச் சென்றிடுவோம். சிறந்த கல்வி கற்ற சமூகத்தை உருவாக்கிடுவோம். உழைத்தே உரமானவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்போம்.



**முருகையா தவமணிதேவி, வட்டகொட.**

## பண்ணையாளர் பிரச்சினைக்கு நீதிகோரிய ஆர்ப்பாட்டம்

# 30 பேருக்கு எதிரான வழக்கு விசாரணை ஜூன் 18, 20 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைப்பு



(வீரமுனை செய்தியாளர்)

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் பிரச்சினை தொடர்பாக நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக ஊடகவியலாளர்கள் இருவர் உட்பட 30பேருக்கு எதிராக ஏறாவூர் பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் மற்றும் 20ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஒக்டோபர் 08ஆம் திகதி மட்டக்களப்பு - செங்கலடி பகுதிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின்போது கொம்மாதுறை பகுதியில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை பிரச்சினைக்குத் தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணை நடைபெற்றது.

இதன்போது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரன் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். இந்நிலையில் ஊடகவியலாளரை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் திகதி மற்றும் 20ஆம் திகதிக்கு விசாரணைக்காக ஒத்திவைத்தார். இந்நிலையில், வழக்கு விசாரணையின்போது வழக்கில் தொடர்புடைய அனைவரும் மன்றுக்கு சமுகமளித்திருந்தனர்.

# அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

**4,78,000 பேர் வாக்களிக்கத் தகுதி: மார்ச் 17 – ஏப்ரல் 29 வரை 385 தேர்தல் முறைப்பாடுகள்**

## மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு



(பாறுக் ஷிஹான்)

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் 06ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட செயலாளருமான சிந்தக்க அபேவிக்ரம குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக அம்பாறை மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க் கிழமை(29) இரவு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

''எதிர்வரும் 06ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 19 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 4,78,000 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மாவட்டத்தில் உள்ள 19 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 458 வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 202 இடங்கள் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களாகும். இவ்வாறு உரிய இடங்களில் எண்ணப்பட்டு அப்பகுதிக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலகருக்கு தெரிவிக்கப்படும். பின்னர் உள்ளூராட்சி மன்றத்துக்குத் தெரிவான பிரதிநிதிகள் குறித்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலகர் அறிவிப்பார். தொடர்ந்து வாக்குகள் உள்ளிட்ட சகல ஆவணங்களும் மத்திய நிலையமான அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

பின்னர் உத்தியோகபூர்வமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான பிரதிநிதிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்படும். இது தவிர, வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டு, இதர ஆவணங்கள் விநியோகித்தல் நடவடிக்கைகள் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் தேர்தலுக்கு முதல் நாள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2025 மார்ச் மாதம் 17ஆம் திகதியிலிருந்து 2025 ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி 12 மணி வரை தேர்தல் முறைப்பாடுகள் 385 கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 09 முறைப்பாடுகளுக்கு பொலிஸ் தரப்பினரால் தீர்வு காணப்பட்டுள்ளது. ஏனைய முறைப்பாடுகளுக்கு தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் தீர்வு காணப்பட்டது.

மேலும், தேர்தலில் 22,919 தபால் மூல வாக்களிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1,300 உத்தியோகத்தர்கள் கடமையாற்றவுள்ளனர். 2,000 பொலிஸாரும் இத்தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர். ஏனைய தரப்பினர் 5,000 பேர் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் இத்தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வாக்காளர்கள் அனைவரும் நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்குமாறும் இறுதிநேரம் வரை காத்திருக்காது வாக்குரிமையைப் பயன்படுத்துமாறும் இதன்போது அவர் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் தினத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிஸார், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய தரப்புகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வாக்களிப்பு நிலையத்தில் காலை 07 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும். பிற்பகல் 04 மணிவரை வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கின்ற வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, பிற்பகல் 04 மணிக்குப் பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்க முடியாது''- என்றார்.

# அட்சய திருதியை முன்னிட்டு புதிய நகைகள் கொள்வனவு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

உலகவாழ் இந்து மக்கள் நேற்று புதன்கிழமை(30) தமது வாழ்வில் என்றும் குன்றாத செல்வம் பெருக வேண்டி தமது வாழ்வில் இடம்பெற வேண்டிய நல்ல சுபகாரியங்களுக்கு வேண்டிய நகைகளைக் கொள்வனவு செய்யும் மிக விசேட தினங்களில் ஒன்றான அட்சய திருதியை முன்னிட்டு மட்டக்களப்பில் சகல தங்க நகை விற்பனை நிலையங்களிலும் மக்கள் தமக்கு வேண்டிய நகைக் கொள்வனவில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

நேற்றுக் காலையிலேயே சகல நகைக்கடைகளும் மங்கலகரமாக அலங்கரிக்கப்பட்டு சிறப்பு கும்ப வழிபாடுகள் இடம்பெற்று பின்பு தமது நகை வியாபாரங்களில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர். இந்த விசேட நாளில் நகையை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விசேட பரிசல்களும் நகைக்கடை உரிமையாளர்களால் வழங்கப்பட்டன.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலுமிருந்து மக்கள் இதன்போது நகருக்குச் சென்று தமக்கு வேண்டிய நகைகளைக் கொள்வனவு செய்தனர்.

## வாகன வருமானவரிப் பத்திரம் வழங்கும் கருமபீடம் 05, 06 ஆம் திகதிகளில் மூடப்படும்

### மாகாண போக்குவரத்து ஆணையாளர் அறிவிப்பு



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகிற வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் கருமபீட சேவைச் செயற்பாடுகள் எதிர்வரும் 05, 06ஆம் திகதிகளில் இடம்பெறமாட்டாதென கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையொட்டி குறித்த இரு தினங்களில் கிழக்கு மாகாண தலைமைக் கருமபீடம் உட்பட மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் இயங்கி வருகின்ற கருமபீடங்கள் யாவும் மூடப்படவிருப்பதால் வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் சேவைகள் இடம்பெறமாட்டாதென்றும் அதன் பின்னர் 07ஆம் திகதி இச்சேவை வழமை போன்று இடம்பெறுமெனவும் அவர் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளார்.

# அல்-ஜலாலின் சாதனை மாணவிகள் கௌரவிப்பு









(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்ட உயர்தர கலைப்பிரிவு மாணவர்கள் 2024இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

வரலாற்றில் முதல் தடவையாக இந்தப் பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களில் இருவர் பல்கலைக்கழகம் தெரிவாவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அவர்களில் ஏ.ஏர்.சாக்கிரா பானு 3 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளதுடன் ஏ.பாத்திமா தூபா 2ஏ, பீ சித்தியைப் பெற்று இந்த வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளனர்.

ஏனைய மாணவர்கள் 03 பாடங்களிலும் திறமைச்சித்திக்கு மேல் பெற்றுள்ளதுடன் பாடசாலையின் சித்தி வீதம் 84% ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சாதனையை புரிந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் வழிநடத்திய பகுதித் தலைவர், உதவிப் பகுதித் தலைவர், அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள்,வகுப்பாசிரியர் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (28) பாடசாலை அதிபர் டீ.கே.எம்.சிராஜ் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பாடசாலையின் முன்னாள் அதிபருடன் உயர்தரப்பிரிவின் ஸ்தாபக அதிபருமான எம்.ஐ.எம்.சைபுத்தீன், பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர்/ பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சாதனை படைத்து பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டு அவர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், உயர்தரம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் பகுதித் தலைவராகவும் வகுப்பாசிரியராகவும் அரசியல் விஞ்ஞான ஆசிரியராகவும் செயற்பட்ட உயர்தரப் பிரிவு பகுதித் தலைவர் யூ.கே.எம். முபாறக்குக்கு விசேட கௌரவம் வழங்கப்பட்டது. மேலும்,அவர்களுக்கு உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் கற்பித்த ஆசிரியர்களும் வழிகாட்டிய வகுப்பாசிரியர் திருமதி சிரூனா பழீல், பிரதி மற்றும் உதவி அதிபர் ஆகியோரும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.



**2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி மாணவன் விநாயக மூர்த்தி விருட்சிகன் கணிதத் துறையில் 3 'ஏ' சித்திபெற்று பொறியியல் துறைக்கு பல்கலைக்கழகத்துக்கு தகுதிபெற்றுள்ளார். (காரைதீவு செய்தியாளர்)**



**2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை மாணவன் சஹீட் ரமழான் இமான் முஸ்தபா, பௌதீக விஞ்ஞானத் துறையில் அம்பாறை மாவட்டத்தில் முதலாம் நிலை பெற்று, தான் கற்ற பாடசாலைக்கும் தனது ஊருக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். இவரை பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூர் உட்பட்ட பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டி, வாழ்த்துகின்றனர். (பொலிவேரியன் செய்தியாளர்)**

# தென்கிழக்குப் பல்கலையின் பொது பட்டமளிப்பு விழா 03, 04ஆம் திகதிகளில்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா, எதிர்வரும் 03 மற்றும் 04ஆம் திகதிகளில் ஒலுவிலில் அமைந்துள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் நடைபெறவுள்ளதாக பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத்தின் தலைமையிலும் வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையிலும் இடம்பெறும் இரண்டு நாட்களைக் கொண்ட குறித்த ஆறு அமர்வுகளைக்கொண்ட பட்டமளிப்பு விழாவில் 2,077 மாணவர்கள் தங்களது பட்டங்களைப்பெறவுள்ளனர்.

# நிர்வாக சேவையின் சிறப்பு தர அதிகாரியாக பதவி உயர்வு

(சாய்ந்தமருது செய்தியாளர்)



கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரான ஏ.எல்.எம்.அஸ்மி 01.01.2025 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை நிர்வாக சேவையின் சிறப்பு தர அதிகாரியாக பதவி உயர்த்தப் பட்டுள்ளார்.

இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவினால் இத்தரத்துக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட 23 நிர்வாக சேவை அதிகாரிகளுள் ஒரேயொரு முஸ்லிம் அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொத்துவில், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர், அக்கரைப்பற்று மாநகராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளரும் பதிவாளரும் கல்முனை மாநகராட்சி ஆணையாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) ஆகிய பதவிகளை வகித்த இவர் வினைத்திறன் மிக்க அதிகாரியாக கடமையாற்றியுள்ளார்.

சிறந்த ஆளுமை மிக்க நிர்வாகியான இவர் இலங்கை நிர்வாக சேவையில் 22 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளார்.


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

**Tel No: - 0112 127 209**

# சிரேஷ்ட ஊடகர் தராக்கி சிவராமின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு





(வீரமுனை செய்தியாளர்)

கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி சிவராமின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(29) மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பன இணைந்து இந்நிகழ்வை நடத்தின. சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி சிவராமனின் உருவப்படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் சிவராம் மற்றும் ஊடகவியலாளர் ரஜீபன் ஆகியோரின் ஆத்மசாந்திக்காக அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்டம் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் பா.அரியநேத்திரன், சுதந்திர ஊடக இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஷ்மன், சிவில் சமூக செயற்பாட்டாளர் எஸ்.சிவயோகநாதன் உட்பட ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நாட்டில் ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பில் எந்த அரசாங்கம் வந்தாலும் நீதியைப் பெற்றுத்தரப்போவதில்லையென்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச நீதிப்பொறிமுறையொன்றின் கீழ் நீதியைப் பெற்றுத்தர சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# தோணா அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்



(பொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது தோணா அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை(28) இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் கோரிக்கைக்கமைவாக சாய்ந்தமருது பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தோணா அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு அதற்கான ஒதுக்கீடு பாராளுமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் பேரில் அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 3.2 மில்லியன் ரூபா பெறுமதியான செயற்றிட்டம் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் தோணா அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்தை ஆரம்பமாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு, அதற்கான ஆலோசனைகளையும் ஆதம்பாவா எம்.பி. வழங்கினார்.

இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர், கல்முனை மாநகர ஆணையாளர், மாநகர பொறியியலாளர், சாய்ந்தமருது பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் , துறைசார் பொறியியலாளர்கள், உரிய திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சித்திட்டமானது பொதுமக்களின் பாவனைக்காக விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பணம், பதவிக்காக முகவர்களை வைத்து நாடகம் ஆடுகின்றது

## ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் உப தலைவர் ஹக்கீம் செரீப்

(பாறுக் ஷிஹான்)

''பணத்துக்காகவும் பதவிக்காகவும் பல முகவர்களை வைத்துக்கொண்டு தற்போது நாடகமாடிக்கொண்டிருக்கின்ற கட்சி தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி. கண்டி, அக்குறணை பகுதிகளுக்குச் செய்தது போன்று கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு பகுதிக்கும் அந்தக் கட்சி எந்த வேலையும் செய்யவில்லை. ஆனால், எமது தாய்மார்களின் உரிமைக் குரலைக் காட்டுவதற்கும் எமது இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கும் உருவாக்கப்பட்ட கட்சிதான் எமது ஐக்கிய சமாதானக் கூட்டமைப்புக் கட்சி. எனவே, அனைவரும் சற்றுச் சிந்திக்க வேண்டும்''- என ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் உப தலைவர் கலாநிதி ஹக்கீம் செரீப் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச சபையில் மாவடிப்பள்ளி வட்டாரம் சார்பாகப் போட்டியிடும் ஏ.எல்.அன்பரின் அரசியல் பணிமனை திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

''காரைதீவு பிரதேச சபை எமக்கு ஒரு கன்னித் தேர்தல். ஆனால், எமது கட்சியானது பழைய கட்சியாகும். தேசிய மக்கள் சக்தி போன்று இன்று வந்த கட்சி அல்ல. தாய்மார்கள் நோன்பு நோற்று உருவாக்கிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து எமது கட்சி உருவானது. மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் மரணித்ததன் பின்னர் தற்போது முஸ்லிம் காங்கிரஸில் உள்ள தலைவர் 25 வருடங்களாக இருந்தும் கூட இளைஞர், யுவதிகளுக்கு ஏதாவது வேலைவாய்ப்பு கொடுத்தாரா? உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள். இல்லை, ஆனால், மர்ஹூம் அஷ்ரப் மரணித்த பிற்பாடு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிழக்கு மாகாண மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. இதுதான் உண்மை. கண்டி, அக்குறணை பகுதிகளுக்குச் செய்தது போன்று கிழக்கு மாகாணத்தில் எந்த ஒரு பகுதிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எந்த வேலையும் செய்யவில்லை.

நாங்கள் கடந்த காலத்தில் வளர்த்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இந்த மாவட்டத்தில் தற்போது இல்லை. பணத்துக்காகவும் பதவிக்காகவும் பல முகவர்களை வைத்துக்கொண்டு தற்போது நாடகமாடிக்கொண்டு இருக்கின்ற ஒரு கட்சி தான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி.

இம்முறை இத்தேர்தலில் களமிறங்கியிருக்கின்றோம். இங்கு தேர்தல் காலத்தில் வருகின்றவர்கள் தையல் மெஷின் தருகின்றோம், காசு தருகின்றோம் என்று வருகின்றார்கள். நாங்கள் கைத்தொழில் பேட்டையை ஆரம்பித்து நிதியைக் கொண்டு இங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்போம். எனவே, அனைவரும் சிந்தித்துப் பாருங்கள். இங்கு தேர்தலுக்காக வருபவர்கள் அனைவரும் பொய் பேசுகின்றவர்கள். ஆகவே, நீங்கள் அனைவரும் உங்கள் மனதில் கையை வைத்து வருகின்ற தேர்தலில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்புக்கு வாக்களித்து உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக அனைவரும் பங்காளியாகுங்கள்''- என்றார்.



# யானை தாக்கியதில் 56 வயது நபர் காயம்

(மீராவோடை செய்தியாளர்)

யானை தாக்கி 56 வயதுடைய நபரொருவர் காயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு வீதி புணானை பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை(29) இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய நபர் வயல் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டு வீடு செல்லும் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# அதிகமான வட்டாரங்களை வென்று அட்டாளைச்சேனை பிரதேச சபையில் மக்கள் காங்கிரஸ் ஆட்சியமைக்கும்

## ஜும்ஆ பள்ளி வட்டார வேட்பாளர் நிசார்



(கோணாவத்தை செய்தியாளர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அதிகமான வட்டாரங்களை வென்று அட்டாளைச்சேனை பிரதேச சபையில் ஆட்சியமைக்குமென ஜும்ஆ பள்ளி வட்டார வேட்பாளர் யூ.எல்.நிசார் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அ.இ.ம. காங்கிரஸ் கட்சி சலுகைகளுக்காகவோ பணத்துக்காகவோ சோரம் போகின்றதல்ல. எமது மக்களின் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொள்வதற்காகவே பயணித்துக்கொண்டிருக்கின்றது. கட்சியை வெற்றிபெறச் செய்ய வேண்டிய பொறுப்பு மக்களின் கைகளிலேயே உள்ளது. மக்களுக்காக எப்போதும் குரல்கொடுத்துக் கொண்டிருக்கின்ற கட்சியும் அதன் தலைமையும் என்றால் அது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் என்பதை யாரும் மறுக்கவே முடியாது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை, ஒலுவில், தீகவாபி, ஆலங்குளம், திராய்க்கேணி போன்ற பிரதேசங்களில் ஒழுங்கு முறையான அபிவிருத்திகளை மேற்கொள்வதுடன், மக்களின் தேவைகளையும் வாழ்வாதாரத் திட்டங்களையும் பெற்றுக் கொடுப்பதே எமது கட்சியினதும் வேட்பாளர்களினதும் நோக்கமாகும்.

தேர்தல்கள் வருகின்றபோது பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றிவிட்டு தெரிவு செய்யப்பட்ட பின்பு மக்களை மறந்து விடுகின்றனர். அவ்வாறானவர்களை மக்கள் இனம் கண்டு இத்தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்''- எனவும் கேட்டுக்கொண்டார்.

# முஸ்லிம் காங்கிரஸ் செயற்பாட்டாளர்கள் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பில் இணைவு



(பாறுக் ஷிஹான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாளிகைக்காடு செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டுள்ளனர்.

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில், காரைதீவு பிரதேச சபைத் தேர்தலுக்காகப் போட்டியிடும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பில் மேற்படி மாளிகைக்காடு செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இணைந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை(29) இரவு அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு பகுதியில் நடைபெற்ற ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக இணைந்து தத்தமது ஆதரவுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதன்போது ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு கட்சியின் உப தலைவர் தொழிலதிபர் கலாநிதி ஹக்கீம் செரீப் மற்றும் இணைப்புச் செயலாளர் ஏ.எம்.அகுவர் ஆகியோர் முன்னிலையில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களாக கடந்த காலங்களில் செயற்பட்டு வந்த மாளிகைக்காடு மேற்கு வட்டார ஆதரவாளர்கள் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை ஆதரித்து இணைந்து கொண்டனர்.

மேலும் எதிர்வரும் காலங்களில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் வெற்றிக்காக அனைத்து மக்களும் முன்னின்று செயற்படுவார்கள் என அவர்கள் உறுதியளித்தனர்.

# இயற்கை வளம் நிறைந்த திருக்கோவிலை சூறையாட பாரம்பரிய கட்சிகளுக்கு இடமளிக்க வேண்டாம்

## சுயேச்சைக் குழு தலைமை வேட்பாளர் சசிகுமார்

(பாண்டிருப்பு செய்தியாளர்)

''திருக்கோவில் பிரதேச சபையின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும். மாற்றத்தின் மூலமே பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப முடியும். இயற்கை வளம் நிறைந்த திருக்கோவில் பிரதேசத்தைச் சூறையாட பழைய பாரம்பரிய கட்சிகளுக்கு இடமளிக்க வேண்டாம்''- என திருக்கோவில் பிரதேச சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் தெரிவித்தார்.

திருக்கோவில் விநாயகபுரம் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், திருக்கோவில் பிரதேச சபையைக் கைப்பற்றி காலாகாலமாக ஆட்சி செய்த பாரம்பரிய அரசியல் கட்சி இங்குள்ள மக்களுக்கு எவ்வித அபிவிருத்தியையும் செய்யவில்லை. மாறாக, மக்களின் வரிப்பணத்தைச் சூறையாடி சுகபோக வாழ்க்கையையே வாழ்ந்துள்ளனர். மக்களுக்கென்று பிரயோசனமான திட்டங்கள் எதனையும் செய்யவில்லை.



இம்முறை திருக்கோவில் பிரதேச மக்கள் மிகத் தெளிவாக இருக்கின்றனர். மக்களுக்காக சேவை செய்யக்கூடிய உண்மையான சேவகர்களைத் தெரிவுசெய்வதென முடிவெடுத்து விட்டனர். அதனால் தான் எமது சுயேச்சைக் குழுவின் பின்னால் ஓரணியில் திரண்டுள்ளனர். நாம் மக்களிடம் உண்மையை சொல்லியே தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளோம். ஏனைய கட்சிகள் எமக்கு மக்கள் வழங்கும் ஆதரவைக் கண்டு பீதியில் எமக்கெதிரான பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளன. இம்முறை திருக்கோவில் பிரதேச சபையை எமது சுயேச்சைக் குழு கைப்பற்றும். அதன் மூலம் பிரதேசத்தின் அடிப்படைத் தேவைகளைக் கட்டமைப்பதுடன் அதிக வருமானம் ஈட்டக்கூடிய சபையாகவும் திருக்கோவில் பிரதேச சபையை மாற்றுவோம்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுக்கொடுப்போம். இயற்கை வளங்கள் நிறைந்த திருக்கோவில் பிரதேசத்தை சிறந்த சுற்றுலாத்தளமாக உருவாக்கி அதன் மூலம் வெளிநாட்டுப் பிரஜைகளின் வருமானத்தைப் பெற்றுக்கொடுப்போம். தமிழ் மக்களை பொய் சொல்லி ஏமாற்ற நினைப்பவர்களுக்கு இத் தேர்தலில் மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள். அரசியலில் மாற்றம் என்பது வேண்டும்.

திருக்கோவில் பிரதேச மக்களும் அரசியல் மாற்றம் ஒன்றுக்குத் தயாராகியுள்ளனர். எமது சுயேச்சைக் குழு பிரதேச சபையைக் கைப்பற்றி நிச்சயம் ஆட்சி அமைக்கும்''- என்றார்.

# கருப்பைக் கழுத்து புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கருப்பைக் கழுத்து புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஷகீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைவாக இடம்பெற்ற இக்கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (29) சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் சாய்ந்தமருது APC நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து தாய்மார்களுக்கும் உடல் நிறை குறியீட்டெண், இரத்த சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தம் என்பனவும் பரிசோதிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் பொதுச் சுகாதார தாதிய சகோதரி, மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாது, பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் 35, 45 வயதுக்குட்பட்ட 30க்கும் மேற்பட்ட தாய்மார்கள் கலந்துகொண்டு பயனடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk businessthamilan@gmail.com

# இலங்கையில் முதல் நேரடி வலையமைப்பு VoNR சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தி 5G புதுமையில் முன்னிலை வகிக்கும் டயலொக்




இலங்கையின் #1 இணைப்பு வழங்குநரான Dialog Axiata PLC, நாட்டின் 5G பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. அதாவது, இலங்கையின் முதலாவது Voice over New Radio (VoNR) நேரடி 5G வலையமைப்பில் வெற்றிகரமாக சோதனை செய்து முடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனை சமீபத்திய Samsung Galaxy S25 Ultra கைபேசியைப் பயன்படுத்தி நடத்தப்பட்டது. இது தடையற்ற 5G இணைப்பில் முழுமையான 5G Voice அனுபவத்தைக் குறிக்கிறது.

5G புதுமையில் தனது முன்னோடி முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக டயலொக் இதற்கு முன்பு 2023 இல் ஒரு PoC Core அமைப்பைப் பயன்படுத்தி ஆய்வக அடிப்படையிலான VoNR Proof of Concept (PoC) சோதனையை நடத்தியது. ஆய்வக அடிப்படையிலான சோதனையிலிருந்து ஒரு படி மேலே சென்று இந்தச் சோதனையை டயலொக்கின் நேரடி 5G Standalone (SA) Core வலையமைப்பில் மேற்கொள்ளப்பட்டது. இது VoNR சேவைகளின் உண்மையான உலக சாத்தியக்கூறுகளை நிரூபிக்கிறது.

VoNR பழைய 2G/3G அல்லது VoLTE சேவைகளை விட தெளிவான குரல் தரம், விரைவான அழைப்பு இணைப்புகள் மற்றும் வலுவான பாதுகாப்பை வழங்குகிறது. கூடுதலாக இது 5G New Calling போன்ற எதிர்கால திறன்களை ஆதரிக்கிறது மற்றும் 5G அலைக்கற்றையின் சிறந்த பயன்பாடு மூலம் ஒட்டுமொத்த வலைப்பின்னல் செயற்றிறனை மேம்படுத்துகிறது.

Dialog Axiata PLC இன் குழும தலைமை தொழில்நுட்ப அதிகாரி ரங்க காரியவசம் கூறுகையில், "இந்த மைல்கல் இலங்கையின் 5G பரிணாமத்தை முன்னெடுப்பதில் டயலொக்கின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. எங்கள் நேரடி 5G வலையமைப்பில் VoNR ஐ வெற்றிகரமாக சோதனை செய்வது, அடுத்த தலைமுறை இணைப்பின் முழு திறனையும் பயன்படுத்தவும் 5G இல் தடையற்ற, உயர்தர குரல் அனுபவத்தை வழங்குவதற்கும் எங்களை ஒரு படி நெருக்கமாகக் கொண்டுசெல்கிறது" - என்றார்.

# 2024 இல் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவுசெய்திருந்த அமானா வங்கி





அமானா வங்கி பி.எல்.சி., 2024 ஆம் ஆண்டில் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்ததுடன், வரிக்குப் பிந்திய இலாபமாக 28%உயர்வை பதிந்து ரூ. 1.8 ஐ எய்தியிருந்தது. இந்தப் பெறுமதி 2023 ஆம் ஆண்டில் ரூ. 1.4 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. ஆரோக்கியமான 21% வளர்ச்சியைப் பிரதிபலித்து, அக்காலப்பகுதிக்கான வரிக்கு முந்திய இலாபம் ரூ. 2.3 பில்லியனிலிருந்து ரூ. 2.8 பில்லியனாக உயர்வடைந்திருந்தது.

குறைவடைந்திருந்த சந்தை வட்டி வீதங்களின் தாக்கங்கள் நிலவிய போதிலும் உறுதியான வருமான வினைத்திறனைப் பதிவுசெய்திருந்தது. வங்கி ஆரோக்கியமான நிதிவசதியளிப்பு எல்லைப் பெறுமதியான 4.0% ஐ பேணியிருந்ததுடன், வங்கியின் தேறிய நிதிவசதியளிப்பு வருமானம் 6%இனால் உயர்ந்து ரூ. 6.9 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. முன்னைய ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 6.5 பில்லியனாகப் பதிவாகியிருந்தது.

எமது பெறுமதி வாய்ந்த சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களால் உருவாக்கப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையிலும் அதிகரித்த டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மற்றும் இதர பெறுமதி சேர் சேவைகள் போன்றவற்றினூடாக வங்கியின் தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் 16% இனால் உயர்ந்து, ஒரு பில்லியன் மைல்கல்லைக் கடந்து ரூ. 1.1 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. மிகை அமெரிக்க டொலர்கள் திரள்வு நிலை காணப்பட்ட சூழலில், வங்கி வியாபார வருமானமாக ரூ. 0.7 பில்லியனைப் பதிவு செய்திருந்தது. தொழிற்பாட்டு சூழல் மற்றும் சொத்தின் தரம் ஆகியவற்றில் முன்னேற்றங்கள் பதிவாகியிருந்த நிலையில், வாடிக்கையாளர்களின் உரிய நேர ஈடுபாடுகள் போன்றவற்றில் முன்னேற்றங்கள் பதிவாகியிருந்த நிலையில், வங்கியின் மதிப்பிறக்க கட்டணங்கள் 86%இனால் குறைந்து, ரூ. 2.1 பில்லியனிலிருந்து ரூ. 0.3 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. அதனூடாக வங்கியின் தேறிய தொழிற்பாட்டு வருமானம் 18% இனால் அல்லது ரூ. 1.3 பில்லியனால் உயர்ந்து ரூ. 8.4 பில்லியனாகப் பதிவாகியிருந்தது.

# கழிவகற்றுவதை ஊக்குவிக்கும் முயற்சிகளை முன்னெடுத்துள்ள நெஸ்லே

## கல்வி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றுடனான கூட்டு முயற்சி




தூய்மையான மற்றும் பசுமையான சூழலை வளர்ப்பதில் நெஸ்லே லங்கா நிறுவனம் மேற்கொண்டுள்ள பயணத்தின் ஒரு பகுதியாக கல்வி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றுடன் இணைந்து பாடசாலைக் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்தை 2020ஆம் ஆண்டில் நெஸ்லே லங்கா நிறுவனம் ஆரம்பித்தது. இந்த செயற்றிட்டம் இலங்கையில் பாடசாலைச் சிறுவர்கள் மத்தியில் பொறுப்புணர்வுடன் கழிவுகளை அகற்றுவதில் நேர்மறை மாற்றத்தை ஊக்குவிப்பதில் கவனஞ்செலுத்தியுள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் மூலம், கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ், நாடு முழுவதுமுள்ள பாடசாலைகள் மத்தியில் கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு அமர்வுகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபை முன்னெடுக்கும். இச்செயற்றிட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 1,000 பாடசாலைகளில் சுமார் 5,00,000 மாணவர்களை எட்டுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

# பிரமாண்டமாக நடைபெற்ற AIA உயர்கல்வி புலமைப்பரிசில் 30ஆவது ஆண்டு விருது விழா



AIA இன்சூரன்ஸ் சமீபத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது, அதன் உயர்கல்வி புலமைப்பரிசில் விருதுகளின் 30 ஆண்டுகளைக் கொண்டாடும் வகையில் கொழும்பில் உள்ள சினமன் லேக்சைடில் நடைபெற்ற விமரிசையான விழாவில் கொண்டாடப்பட்டது. AIA உயர்கல்வி புலமைப்பரிசில், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தரம் 05 புலமைப்பரிசில் தேர்வில் சிறந்து விளங்குபவர்களுக்கு அவர்களின் உயர்தரப் படிப்பு தொடங்கியதிலிருந்து பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடிக்கும் வரை மாதாந்த உதவித்தொகையை வழங்குகிறது. இந்த திறமையான மாணவர்கள் நிதிச் சுமையின்றி தங்கள் கல்வி அபிலாஷைகளைத் தொடர உதவுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும். இந்த ஆண்டு நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறந்து விளங்கும் 24ஆவது தொகுதி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் தற்போது தங்கள் க.பொ.த. உயர்தரப் படிப்பைத் தொடங்கியுள்ளனர். குறிப்பிடத்தக்க வகையில், இந்தப் புலமைப்பரிசில்கள் AIA வாடிக்கையாளர்களுடனான எந்தவொரு தொடர்பையும் பொருட்படுத்தாமல் முற்றிலும் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

இந்த இளம் அறிஞர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளை இந்த விழா கொண்டாடியது, மேலும் கல்வியில் சிறந்து விளங்குவதற்கும் நாளைய தலைவர்களை வளர்ப்பதற்கும் AIA இன் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட தொல்பொருள் முதுகலை நிறுவனத்தின் மூத்த பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவா, கல்வியின் முக்கியத்துவத்தையும் எதிர்கால சந்ததியினரை மேம்படுத்துவதில் பெருநிறுவனப் பொறுப்பின் பங்கையும் எடுத்துரைத்து, ஓர் ஊக்கமளிக்கும் உரையை நிகழ்த்தினார்.

1994 முதல் இந்த நீண்டகால பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) முயற்சியின் மூலம் உள்ளங்களை ஊக்குவிக்க AIA இன்சூரன்ஸ் உறுதிபூண்டுள்ளது.

# ரூ. 666 பில்லியனைத் தாண்டியுள்ள இலங்கை வங்கியின் புத்தாண்டுப் பரிவர்த்தனைகள்



"இலங்கையின் முன்னணி வங்கியான இலங்கை வங்கி (BOC), 2025ஆம் ஆண்டின் தமிழ்ப் புத்தாண்டு காலத்தில் ரூ. 666 பில்லியனைத் தாண்டிய வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்து நாடு முழுவதும் வங்கிச் சேவையின் தன்னிகரற்ற முன்னோடி என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்தச் சாதனை, இலங்கை வங்கியின் பரந்த சேவை வலையமைப்பில் வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் பண்டிகைக் காலங்களில் தடையற்ற நிதிச் சேவைகளை வழங்கும் அதன் அர்ப்பணிப்பையும் காட்டுகிறது.

2025 ஏப்ரல் 1 முதல் 15 வரை, விற்பனை முனையங்கள் (POS) வழியாக இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் மேற்கொண்ட 3,236,318 பரிவர்த்தனைகள் ரூ. 13.57 பில்லியனாக இருந்தது. இதே காலத்தில், நாடளவில் 932 பண மறுசுழற்சி இயந்திரங்கள் (CRM) மற்றும் 568 ATM இயந்திரங்கள் மூலம் 9,173,642 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு, மொத்தமாக ரூ. 211.97 பில்லியன் பரிமாற்றம் செய்யப்பட்டன. இதன் மூலம், நாடு முழுவதுமுள்ள வாடிக்கையாளர்கள் 24 மணி நேரமும் தடையில்லா பண வைப்பு மற்றும் மீளப்பெறல் சேவைகளைப் பெற முடிந்தது.

ஏப்ரல் 07 முதல் 12 வரையான காலப்பகுதியில் இலங்கை வங்கியின் 658 கிளைகள் 961,966 நேரடி சேவைகள் மூலம் ரூ. 440.48 பில்லியன் பெறுமானம் கொண்ட பரிவர்த்தனைகளைச் செய்தன. வாடிக்கையாளர்களுக்கான கூடுதல் தேவைகளைக் கருத்திற்கொண்டு, ஏப்ரல் 12ஆம் திகதியான பொது விடுமுறையன்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகள் திறந்துவைக்கப்பட்டன.

இந்தச் சாதனையைப்பற்றிக் கருத்து தெரிவித்த கிளைச் செயற்பாடுகளுக்கான பிரதிப் பொது முகாமையாளர் ப்ரியல் சில்வா, "வங்கிக் கிளைகள் மற்றும் டிஜிட்டல் தளங்களினூடாக இத்தனை பரிவர்த்தனைகளை சீராக நிர்வகித்திருப்பது எங்களது செயற்பாட்டுத் திறனையும் நாடு முழுவதுமுள்ள பரந்த வலையமைப்பையும் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. இந்தப் புத்தாண்டு காலத்தில் நம்பிக்கையுடன் இலங்கை வங்கியைத் தேர்ந்தெடுத்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்றார்.

# CDB உடன் கைகோர்க்கும் சித்ரசேன வஜிரா நாட்டிய நிலையம்



இலங்கையின் பாரம்பரிய நாட்டியத்தின் புதிய கலாசாரத் தூதுவர்களுக்காக தொழில்நிலை வாய்ப்புகளை உருவாக்க சித்ரசேன வஜிரா நாட்டிய மையம் CDB யுடன் கைகோர்த்துள்ளது. இந்தக் கைகோர்ப்பினூடாக சித்ரசேன கலாமன்றத்துக்கு பிரத்தியேகமான பாரம்பரிய நாட்டிய மைய முறைகள் உள்வைக்கப்பட எதிர்பார்க்கப்படுவதுடன், பாரம்பரிய ட்ரம், ஃபோக் பாடல் மற்றும் திரையரங்கு வடிவமைப்பு தொடர்பான அடிப்படைப் புரிந்துணர்வை வழங்கவும் எதிர்பார்த்துள்ளது.



இலங்கையின் பாரம்பரிய நாட்டியத்தைப் பேணி 80 வருட காலமாகப் பேணுவதில் தன்னை ஈடுபடுத்தி வரும் சித்ரசேன வஜிரா நாட்டிய மையத்துடன் (CVDF), சிட்டிசன்ஸ் டெவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி. (CDB) கைகோர்த்துள்ளது. இந்தக் கைகோர்ப்பினூடாக, CDB இன் நிலைபேறான மூலோபாயத்தின் கீழ் சமூக அக்கறைப் பிரிவில், கலை மற்றும் கலாசாரத்தைப் பேணும் முயற்சிகள் மேலும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. CVDF மற்றும் CDB ஆகியன ஒன்றிணைந்து, பாரம்பரிய நாட்டிய அரங்கு மையங்களை வலிமைப்படுத்துவது மற்றும் இலங்கையின் பாரம்பரிய நாட்டியங்களில் பிணைந்துள்ள மாறாத கலாசார பாரம்பரியத்தை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சித்ரசேன தனது பாரியார் வஜிராவுடன் இணைந்து நாட்டின் பழைமையான கலாசாரம், பாரம்பரியங்கள் மற்றும் ஃபோக்லோர் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் நாட்டியங்களை அரங்குக் கலையாக மாற்றியமைப்பதில் முக்கிய பங்காற்றியிருந்தன. வஜிரா இலங்கையின் புகழ்பெற்ற பாரம்பரிய பலெரினா நாட்டியத்தின் புகழ்பெற்றவராகத் திகழ்வதுடன் அரங்கு முறையை நிறுவியிருந்தமை மாத்திரமன்றி, Ceylonese Ballet எனும் புதிய genre ஐயும் இவர் உருவாக்கியிருந்தார். இவர்களின் இந்த புரட்சிகரமான செயற்பாட்டினூடாக இலங்கையின் நாட்டியம் சர்வதேச அரங்குக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், ராஜாக்கள், அரச தலைவர்கள் மற்றும் சர்வதேச பார்வையாளர்களுக்காக தமது கலை வெளிப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

# தீபாலை அறிமுகப்படுத்தும் செனொக் - ஷங்கன்







புத்தாக்கமான வாகனத் தயாரிப்பில் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட 160 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட முன்னணி நிறுவனமான ஷங்கன் ஓட்டோமொபைல் (Changan Automobile), செனோக் (Senok) உடனான பிரத்தியேக கூட்டாண்மை மூலம் இலங்கைச் சந்தைக்குள் காலடி எடுத்து வைக்கின்றது. ஷங்கன் நிறுவனமானது, சீனாவின் மிகப்பெரிய மின்சார வாகன (EV) உற்பத்தியாளர் மற்றும் அறிவார்ந்த இயக்கத்தின் முன்னோடியாகும். இது, அதன் விரிவான ஆய்வு, மேம்பாட்டுத் திறன்கள் மற்றும் எதிர்காலத்தை எதிர்கொள்ளும் பொறியியல் கட்டமைப்பை உள்ளூர் வீதிகளுக்கு கொண்டுவருகின்றது.

இலங்கையின் மிகவும் மதிப்புக்குரிய வாகன விநியோகஸ்தரான செனொக், ஷங்கனின் முதற்றர மின்சார வாகன வகையான தீபாலை உள்ளூர் சந்தையில் அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றது. வாகனங்களுக்கான முன்பதிவுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு முதலாவது தொகுதி வாகனங்கள் 2025 மே மாதம் வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.




NDB வங்கியானது பல வருட முயற்சியின் ஒரு மைல்கல்லாக, வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் இளைஞர் பிரிவுடன் (WNPS) இணைந்து, பாதுகாப்புக்கான கல்வித்திட்டத்தின் இறுதிக் கட்டத்தை அண்மையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்தது. சுற்றுச்சூழல் உணர்வுள்ள புதிய இளைஞர்களின் தலைமுறையை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் இந்த மக்கள் அறிவியல் வெளிக்களப் பட்டறையானது 2025 ஏப்ரல் 01 முதல் 03 வரை ருணகந்தா மலைக்காடுகளின் மையப்பகுதியில் நடைபெற்றது. பதுரலிய பகுதியில் அமைந்துள்ள ஐந்து பாடசாலைகளான பதுரலிய மகா வித்தியாலயம், டிக்ஹேனா கனிஷ்ட வித்தியாலயம், கம்புராவல மகா வித்தியாலயம், இங்குருதலுவ கனிஷ்ட வித்தியாலயம் மற்றும் ஹெடிகல்லா ஸ்ரீ விபுலசிறி கனிஷ்ட வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த மாற்றத்துக்கான அனுபவத்தை ஏற்படுத்தும் பட்டறையில் இணைந்துகொண்டுள்ளதையும் படத்தில் காணலாம்.

# நாட்டின் வளர்ச்சிக்கும் முதலீட்டுக்கும் உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் Belluna Lanka



இலங்கையில் தற்போது ஒரு சுயாதீன நிறுவனமாக செயற்பட்டுவரும் Belluna Lanka, நாட்டின் வளர்ச்சிக்கும் முதலீட்டுக்கும் நீண்டகாலத்துக்கான தனது உறுதிப்பாட்டைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக பல்வேறு துறைகளில் உலகளாவிய அனுபவம் கொண்ட ஜப்பானின் Belluna Co. Ltd. நிறுவனத்துக்கு முழுமையாகச் சொந்தமான ஒரு துணை நிறுவனம் எனும் வகையில், Belluna Lanka அதன் தாய் நிறுவனத்தின் நிதி உறுதித்தன்மை, சர்வதேச கௌரவம் மற்றும் வெற்றிகரமான வணிக முயற்சிகள் ஆகிய உறுதியான அடித்தளமூடாக ஆதரவைப் பெறுகிறது. உலகளாவிய திடமான தனிப்பட்ட நிதியிருப்புடன், Belluna Lanka இலாபகரமான முயற்சிகளின் நிரூபிக்கப்பட்ட பதிவுகளுடன் ரியல் எஸ்டேட், விருந்தோம்பல் மற்றும் சேவை வழங்கலில் ஒரு முன்னோடியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் புத்தாக்கமான முதலீடுகளை நிறுவனம் ஏற்படுத்துகிறது. இலங்கையில் மேற்கொண்ட அதன் அனைத்து முதலீடுகளும் ஜப்பானிலிருந்து நேரடியாக தனிப்பட்ட நிதி வழங்கல் மூலமானவையாகும். இதன் மூலம் நிறுவனம் காட்டும் நிதிப் பாதுகாப்பும் வளர்ச்சியின் மீதான உறுதியும் வெளிப்படுகின்றன.

கடந்த பத்து வருடங்களாக Belluna Lanka இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் மூலதன விரிவாக்கம் மேற்கொண்டு, நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. இலங்கையின் பண்பாட்டு மரபையும் பாரம்பரியத்தையும் மதித்து தரமான வாழ்விடங்களையும் அனுபவங்களையும் உருவாக்குவதே நிறுவனத்தின் நோக்கமாகும்.



# அடுத்த 24 மணி நேரத்தில் இந்தியா தாக்குதலை தொடங்கும்!

## பாகிஸ்தான் உளவுத்துறை எச்சரிக்கை

இந்திய - பாகிஸ்தான் மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், "அடுத்த 24 மணி நேரத்துக்குள் இந்தியா தாக்குதலை தொடங்கும்" என பாகிஸ்தான் அரசை அந்நாட்டு உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் "இந்தியாவின் இராணுவ நடவடிக்கைக்கு உறுதியாகவும் தீர்க்கமாகவும் பதிலளிக்கப்படும்" என தெரிவித்துள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தளத்தில் கடந்த 22ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட சம்பவம், இந்தியா மட்டுமின்றி சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய கொடுஞ்செயலில் ஈடுபட்டது தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் கிளை அமைப்பான டி.ஆர்.எப். என்பது தெரியவந்துள்ளது. இதன் பின்னணியில் பாகிஸ்தான் இருக்கிறது என்று இந்தியா குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த பயங்கரவாதத் தாக்குதலால் இந்தியா-பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக இந்திய அரசு அறிவித்தது. மேலும் பாகிஸ்தானியர்களுக்கான விசா சேவைகள் இரத்து செய்யப்படுவதாகவும், இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் இந்திய மத்திய அரசு அதிரடியாக அறிவித்தது.

இதேபோல் பாகிஸ்தான் அரசு, தனது வான்வெளியில் இந்திய விமானங்கள் பறக்க தடை விதிக்கப்படுவதாகவும், சிம்லா ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாகவும் அடாவடி அறிவிப்புகளை வெளியிட்டது. மேலும் இருநாட்டு அரசுகளும் தங்கள் இராணுவப் படைகளை தயார் நிலையில் வைத்திருக்கின்றன.

இந்நிலையில், அடுத்த 24 மணி நேரத்தில் இந்தியா தாக்குதலை தொடங்கும் என பாகிஸ்தான் அரசை அந்நாட்டு உளவுத்துறை எச்சரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து பாகிஸ்தான் அமைச்சர் அட்டாவுல்லாஹ் தரார் (Attaullah Tarar) தெரிவிக்கையில்,

"பஹல்காமில் சமீபத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் பாகிஸ்தானின் தொடர்பு குறித்து ஆதாரமற்ற மற்றும் ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், பாகிஸ்தானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க இந்திய அரசு தயாராகி வருகிறது.

ஏற்கனவே பாகிஸ்தான் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாடாக இருந்து வருகிறது. பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் பாகிஸ்தான் எப்போதும் கண்டித்து வருகிறது.

பஹல்காம் தாக்குதல் குறித்து நடுநிலையான விசாரணை குழுக்கள் மூலம் நம்பகமான, வெளிப்படையான மற்றும் சுதந்திரமான விசாரணையை நடத்த பாகிஸ்தான் முன்வந்தது. ஆனால், இந்தியா விசாரணையைத் தவிர்த்து மோதல் பாதையை தேர்ந்தெடுத்தது.

இந்தியாவின் எந்தவொரு இராணுவ நடவடிக்கைக்கும் உறுதியாகவும், தீர்க்கமாகவும் பதிலளிக்கப்படும். இதனால் ஏற்படும் விளைவுகளின் பொறுப்பு இந்தியாவையே சேரும்" என்று தெரிவித்தார்.

முன்னதாக பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி தருவதற்கான உயர்மட்ட ஆலோசனை கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "எதிரிக்கு பதிலடி தர, இலக்குகளை தீர்மானிக்கும் முழு சுதந்திரம் இராணுவத்திற்கு உள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிராக மரண அடி கொடுக்க வேண்டியது நமது நாட்டின் உறுதிப்பாடு" என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பஹல்காம் தாக்குதல் எதிரொலி

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழு மாற்றியமைப்பு



தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழுவுக்கு புதிய அதிகாரிகளை நியமனம் செய்து இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கோர தாக்குதலில் 26 அப்பாவி சுற்றுலா பயணிகள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர், நேற்று (30) முதன்முறையாக பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மத்திய அமைச்சர்களான ராஜ்நாத் சிங், அமித்ஷா, நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பது தொடர்பாக முக்கிய முடிவு எடுக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழுவுக்கு புதிய அதிகாரிகளை நியமனம் செய்து இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் குழுத் தலைவராக முன்னாள் ரோ தலைவர் அலோக் ஜோஷி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி இராணுவ சேவைகளிலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகளான முன்னாள் மேற்கு விமானப்படை தளபதி எயார் மார்ஷல் பி.எம்.சின்ஹா, முன்னாள் தெற்கு இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ.கே.சிங் மற்றும் ரியர் அட்மிரல் மோன்டி கன்னா ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

மேலும் இந்திய பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இரண்டு உறுப்பினர்களான ராஜீவ் ரஞ்சன் வர்மா மற்றும் மன்மோகன் சிங் ஆகியோரும், முன்னாள் இந்திய வெளியுறவு சேவை (IFS) தூதர் பி. வெங்கடேஷ் வர்மா ஆகியோரும் 7 பேர் கொண்ட குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இதனிடையே அடுத்த 24மணி நேரத்தில் இந்தியா தாக்குதலை தொடங்கும் என பாகிஸ்தான் அரசை அந்நாட்டு உளவுத்துறை எச்சரித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக ஜம்மு காஷ்மீர் மாநிலம், பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக, நேற்று முன்தினம், டில்லியிலுள்ள பிரதமர் மோடி இல்லத்தில், உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது, "எங்கு, எப்போது, எந்த இலக்கை தாக்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்ய, இராணுவத்துக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது" என பிரதமர் மோடி தெரிவித்தார்.



# நான் தான் அடுத்த பாப்பரசர்

## ட்ரம்ப் நகைச்சுவை

பாப்பரசர் பிரான்சிஸின் மறைவைத் தொடர்ந்து அடுத்த புதிய பாப்பரசர் யார்? என்ற எதிர்பார்ப்பு உலகம் முழுவதும் எழுந்துள்ளது. இந்நிலையில் "நான் பாப்பரசராக இருக்க விரும்புகிறேன்; நான் தான் அடுத்த பாப்பரசர்" என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நகைச்சுவையாகத் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் (வயது 88), உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 21ஆம் திகதி காலமானார். அவரது திருவுடல் கடந்த 21ஆம் திகதி முதல் வத்திக்கானிலுள்ள புனித பீட்டர் பேராலயத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. உலகம் முழுவதிலுமிருந்து வருகைத்த தந்த இலட்சக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பாப்பரசரின் திருவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து பாப்பரசரின் திருவுடல் கடந்த 26ஆம் திகதி ரோமில் அடக்கம் செய்யப்பட்டது. பாப்பரசர் பிரான்சிஸ் மறைவை தொடர்ந்து புதிய பாப்பரசர் யார்? என்ற எதிர்பார்ப்பு உலகம் முழுவதும் எழுந்துள்ளது. இந்நிலையில் புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்கான கர்தினால்களின் மாநாடு எதிர்வரும் 07ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

உலகம் முழுவதும் 252 கர்தினால்கள் உள்ள நிலையில், பாப்பரசரை தெரிவு செய்வதற்கான வாக்களிக்கும் தகுதி படைத்த 80 வயதுக்குட்பட்டவர்கள் 135 பேர் ஆவர். அவர்கள் தங்களுக்குள்ளே இருந்து ஒருவரை புதிய பாப்பரசராக தெரிவுசெய்வார்கள். இதற்காக வத்திக்கான் சிஸ்டைன் சிற்றாலயத்தில் 7ஆம் திகதி கூடி ஒருவரை புதிய பாப்பரசராக தெரிவு செய்கிறார்கள். இது ஓரிரு நாளிலோ அல்லது வாரக்கணக்கிலோ நீளும் என்பது குறிப்பிடத்தக்கது.

ரோமில் பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கலந்துகொண்ட நிலையில், புதிய பாப்பரசர் தெரிவு குறித்து நகைச்சுவையாகப் பேசியுள்ளார். கத்தோலிக்க திருச்சபையை யார் வழிநடத்த வேண்டும் என்பது குறித்த அவரது கருத்து கேட்கப்பட்டதற்கு ட்ரம்ப், "நான் பாப்பரசராக இருக்க விரும்புகிறேன்; அதுதான் எனது முதல் தெரிவாக இருக்கும்" - என்றார்.

மேலும் பாப்பரசர் பிரான்சிஸுக்குப் பதிலாக யார் இருக்க வேண்டும் என்று கேட்டபோது, பதில் அளித்த ட்ரம்ப், நியூயோர்க்குக்கு வெளியே இருக்கும் ஒரு கர்தினால் எங்களிடம் இருக்கிறார், அவர் மிகவும் நல்லவர், எனவே என்ன நடக்கிறது என்று பார்ப்போம் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**புதிய பாப்பரசர் தெரிவிலிருந்து விலகிய இத்தாலிய கர்தினால்**

மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் ஆலோசகராக இருந்தவர் ஏஞ்சலோ பெச்சியூ. அடுத்த பாப்பரசருக்கான முக்கிய போட்டியாளர்களில் ஒருவராக கருதப்பட்ட இவரை கடந்த 2018இல் கர்தினாலாக பாப்பரசர் பிரான்சிஸ் அறிவித்தார். வத்திக்கானில் முக்கிய பொறுப்புகளை வகித்த இவர் 2020இல் நிதி முறைகேட்டில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது. அதில் வத்திக்கான் குற்றவியல் நீதிமன்றத்தில் இவருக்கு சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்நிலையில் பாப்பரசர் பிரான்சிஸ் மறைவுக்குப் பின்னர் எதிர்வரும் 07ஆம் திகதி புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்கான கர்தினால்களின் மாநாடு தொடங்க இருக்கிறது. இதில் பெச்சியூ பங்கேற்பாரா என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் தனது முடிவை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார். பாப்பரசர் பிரான்சிஸின் விருப்பத்துக்கு கீழ்படியும்படி, கர்தினால்கள் மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என பெச்சியூ அறிவித்துள்ளார்.

## ஈரான் துறைமுக வெடிவிபத்தில் 70 பேர் உயிரிழப்பு



ஈரானின் தென்மேற்கே அமைந்துள்ள நாட்டின் மிகப் பெரிய ஷாஹித் ரஜேயி துறைமுகத்தில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 70ஐ தாண்டியுள்ளதுடன் 1,000 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் "ஒரு சிலரின் அலட்சியப் போக்குதான் இவ்வெடிவிபத்துக்கு காரணம்" என்று ஈரான் சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படாததும் இதற்குக் காரணம் என்று கூறிய அவர்கள், இது தொடர்பாக சிலரை அழைத்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

## இருளில் மூழ்கிய ஸ்பெயின் - போர்த்துக்கல்

ஸ்பெயின், போர்த்துக்கலின் பல நகரங்களில் மின்வெட்டு ஏற்பட்டுள்ளதால் பல இலட்சம் மக்கள் தவிக்கும் நிலையில், உட்கட்டமைப்பு வசதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்வெட்டால் பாதிக்கப்பட்ட நகரங்களில் மாட்ரிட், பார்சிலோனா, லிஸ்போன், செவில்லே மற்றும் போர்டோ போன்ற முக்கியமான தொழில் நகரங்களும் அடங்கும். மின்வெட்டு காரணமாக ரயில் சேவைகள், மெட்ரோ ரயில் நிலையங்கள், விமான நிலையங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஸ்பெயின் அரசும், மின் இணைப்பு நிறுவனமான ரெட் எலக்ட்ரிகாவும் மின் தடைக்கான காரணத்தை ஆராய்ந்து வருவதாகவும், மாற்றுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளன. ஐரோப்பா முழுவதும் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 10.6 மில்லியன் மக்கள் தொகை கொண்ட போர்த்துகலின் தலைநகர் லிஸ்போன் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகரங்களுடன், நாட்டின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளும் மின்வெட்டால் பாதிக்கப்பட்டன. போர்த்துக்கலின் மின் விநியோக நிறுவனமான இ-ரிடஸ், ஐரோப்பாவின் மின் அமைப்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இந்த மின்வெட்டு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.



# சேவல் சின்னம் தான் கொத்மலை பிரதேச சபையை அமைக்கும்

## இ.தொ.கா. பொதுச் செயலாளர்/பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் நம்பிக்கை



''வரலாற்றைக் கூறி நான் உங்களிடம் வாக்கு கேட்கவில்லை. இது என் சொந்த ஊர். அந்த நம்பிக்கையில் தான் உங்களிடம் வாக்கு கேட்கின்றேன். உங்களுக்கு எங்கள் மீது முழுமையான நம்பிக்கை இருந்தால் சேவல் சின்னத்துக்கு வாக்களியுங்கள். ஏனென்றால், கொத்மலை பிரதேச சபையை அமைக்கப் போவது சேவல் சின்னம் தான்”

- இவ்வாறு இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட எல்பட, ரொட்சில்ட், தவலந்தன்ன, பூண்டுலோயா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜீவன் மேலும் கூறியதாவது,

''நான் ஆளும் கட்சி அல்லது எதிர்க்கட்சியைக் குறை சொல்லி அரசியல் செய்ய விரும்பவில்லை. என்னுடைய அபிப்பிராயம், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நுவரெலியா மாவட்டத்துக்கு 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 92 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், நாங்கள் கடந்த வருடம் 580 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்திருந்தோம். நுவரெலியா மாவட்டத்துக்கு நாங்கள் ஒதுக்கிய நிதியை விட 5 மடங்கு குறைவாகவே தற்போதைய அரசாங்கம் நிதியொதுக்கீடு செய்துள்ளது.

அவ்வாறிருக்கும்போது, அமைச்சிலிருந்து நீங்கள் எந்த விதமான வேலைத்திட்டங்களும் எதிர்பாக்க முடியாது. இன்று பாராளுமன்றத்தில் சிலர் 4 ஆயிரம் வீடுகள் கட்டுவதாகவும் 5 ஆயிரம் வீடுகள் கட்டுவதாகவும் வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள், ஆனால், வரவு - செலவுத் திட்டத்தைப் பாருங்கள், மலையகம் முழுவதுமாகவே வெறுமனே 379 வீடுகள் மாத்திரமே கட்ட முடியும். எவ்வாறு 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் வீடுகளைக் கட்ட முடியும்?

நாங்கள் 2020 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும் போது எங்களுக்கு 3 அச்சுறுத்தல்கள் காணப்பட்டன. முதலாவது, மறைந்த தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் மரணத்துக்குப் பின்னர் அதைச் சரி செய்ய எங்களுக்கு சில கால அவகாசம் தேவைப்பட்டது. அரசியல் ஒரு பக்கம், தொழிற்சங்கம் ஒரு பக்கம்.

இரண்டாவது, கொரோனா தொற்று நோயும் சேர்ந்து வந்தது. அடுத்ததாக, பொருளாதாரச் சிக்கல். வேலை செய்வதற்கான சூழ்நிலை இல்லை. ஆனால், 2023 ஆம் ஆண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. அப்போதும் எங்கள் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. இருந்தாலும் கூட உங்களுக்கான தேவைகள் நடந்தன.

வீட்டுத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. காணி உரிமைப் பத்திரம் தொடர்பாக வேலைத்திட்டம் நடைபெற்றது.இந்திய அரசாங்கமூடாக 19 ஆசிரியர்களை வரவழைத்து பல ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கினோம். குழந்தைகளுக்கேற்ற 1,197 சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு இலவச காலை உணவுத் திட்டம் வழங்கினோம்.

குறிப்பாக, இவை அனைத்தையும் ஒரு வருட காலத்தில் செய்தும் கூட, வேலை செய்யவில்லை என்கிறார்கள்.

மேலும் சம்பள உயர்வும் வழங்கினோம். அவ்வாறிருக்கையில் புதிய அரசாங்கம் வந்து 8 மாத காலமாகியும் கூட வெறும் 4 சட்டங்களே அமுல்படுத்தப்பட்டன. இதை நான் விமர்சிக்கவில்லை. மக்களுக்கு புரியவேண்டுமென்ற ஆதங்கத்தில் பேசுகிறேன்.

கொத்மலை பிரதேச சபையை உருவாக்கியது நாங்கள் தான். ஆனால், தவிசாளரும் கிடையாது, உப தவிசாளரும் கிடையாது. மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். அதனால் தான் இந்தத் தடவை கொத்மலை பிரதேசத்தில் நாங்கள் சேவல் சின்னதில் தனித்துக் கேட்கின்றோம். கொத்மலை பிரதேசத்தை சேவல் சின்னம் இல்லாமல் உருவாக்க முடியாது. அப்படியிருக்கும்போது இந்த வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்” – என்றார்.

## சட்டவிரோத கஞ்சா செடி வளர்ப்பு: ஒருவர் கைது

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டமாருவ , இட்டினாம்பல கிராமத்தில் 7,8,9 அடி உயரங்களையுடைய 19 கஞ்சா செடிகளை சட்டவிரோதமாகப் பயிர்செய்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவரை மடுல்சீமை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை பசறை மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தடுப்புக் காவல் உத்தரவைப் பெற்று மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் தேசிய மக்கள் கட்சியே கைப்பற்றும்

## பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க





*(யடவத்த செய்தியாளர்)*

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வித சவால்களுமின்றி சகல உள்ளூராட்சி மன்றங்களையும் தேசிய மக்கள் சக்தியே கைப்பற்றுமென பிரதியமைச்சர் கமகெதர திசாநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாத்தளை மாநகர சபைக்கு தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் கூட்டம் மாத்தளை கிரேன் சிட்டி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. அதன்போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்நாட்டில் அரசியல் கலாசாரத்தில் முன்மாதிரியான அரசியலமைப்பையே பின்பற்றி வருகின்றது. ஜனாதிபதி முதல் அமைச்சர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள் சகல துறைகளிலும் நாட்டுக்கும் மக்களுக்கும் முன்மாதிரியாகவே செயற்பட்டு வருகின்றனர். ஊழல், மோசடி, வீண்விரயம், இன, மத, பேதமின்றி தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. பாராளுமன்றத்தின் பலம் எங்களிடமே உள்ளது. அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பூரண ஆதரவு பெற்று ஊழலற்ற நேர்மையான மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்படும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்நாட்டில் விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டபின் நடைபெற்று வந்த பாராளுமன்றத் தேர்தல்களில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட ஒரே ஒரு கட்சி தேசிய மக்கள் சக்தியாகும். எதிர்வரும் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களிலும் தேசிய மக்கள் சக்தியே மகத்தான வெற்றியை ஈட்டிக் கொள்ளும். ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட பலர் இன்று எதிர்க்கட்சி சார்பாக பழைய முகங்களை மாற்றிக்கொண்டு புதிய சின்னத்திலும் புதிய முகங்களிலும் போட்டியிட முன்வந்துள்ளனர். இதற்கு ஒருபோதும் மக்கள் இடமளிக்கக்கூடாது. இவ்வாறானவர்கள் மீண்டும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றினால் மீண்டும் ஊழல், மோசடி இடம்பெறுவதற்கு கூடுதலான வாய்ப்புக் காணப்படுகின்றது. மத்திய அரசாங்கத்தால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு இவ்வாறான உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்வது அரசாங்கத்துக்கு பாரிய சிக்கலாகக் காணப்படும். எனவே, மக்கள் நன்றாகச் சிந்தித்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்ய வேண்டும்''- என்றார்.

இக்கூட்டத்தில் மாத்தளை நகரிலுள்ள வர்த்தகர்கள், புத்திஜீவிகள், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கை தோட்ட சேவையாளர் சங்க மே தின பேரணியும் கூட்டமும்

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தின பேரணியும் பொதுக் கூட்டமும் “தோட்டங்களை உயிர்ப்பித்து உரிமைகளை வென்றெடுக்கும் தொழிலாளர் சக்தி” என்ற கருப்பொருளில் அவிசாவளையில் இன்று (01) இடம்பெறுகிறது.

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் 1920 இல் ஆரம்பிக்கப்பட்ட அரச, அரசு சார் மற்றும் தனியார் துறை தோட்டங்களில் உள்ள தோட்ட ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நூற்றாண்டை நிறைவு செய்த நாட்டின் பழைமையான தொழிற்சங்கமாகும்.

அண்மைக்கால வரலாற்றில் உழைக்கும் மக்களின் அபிலாஷைகளுக்குப் பதிலாக பாகுபாடான அரசியல் நோக்கங்களுக்காக சர்வதேச தொழிலாளர் தினம் பெரும்பாலும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. எமது மே தினம் 1886இல் எட்டு மணி நேர வேலைக்காக உழைக்கும் மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடித் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்ட போர்க்குணமிக்க தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் தலைவர்களை நினைவு கூரவும் அவர்களின் உன்னதமான உயிர்த் தியாகத்தைப் போற்றவும் உழைக்கும் வர்க்கத்தின் எதிர்கால அபிலாஷைகளை உயர்த்தவும் கொண்டாடப் படுகிறதென இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் தலைமைச் செயலாளர் சத்துர சமரசிங்க தெரிவித்தார்.

# ஜீப் வாகனம் திருட்டு; திருடர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை

*(எம்.ஏ.அமீனுல்லா )*

நாட்டின் முன்னணி லீசிங் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கண்டி - வராபிட்டிய பகுதியிலுள்ள வாகனத் தளமொன்றினுள் நுழைந்து சுமார் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான மொண்டேரோ ஜீப்பைத் திருடிச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் வர்த்தகர் உட்பட மூவரைக் கைதுசெய்ய பல்லேகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் (29) அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட வாகனத் தளத்தின் பாதுகாப்பு அதிகாரி பல்லேகல பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் (29) காலை முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் மஹியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மாதாந்த தவணைக் கட்டணத்தை செலுத்தாததால் மேற்குறித்த வர்த்தகருக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் ஜீப்பை ஐந்து நாட்களுக்கு முன் குத்தகை நிறுவனத்தினர் பறிமுதல் செய்துள்ளனர் .

வராப்பிட்டியில் உள்ள நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனத் தளத்தில் ஜீப் நிறுத்தப்பட்டிருந்த போது மேலும் இருவருடன் அங்கு வந்த வர்த்தகர் “எனது வாகனத்தை எடுத்துச் செல்வதாக உங்கள் முதலாளிகளிடம் சொல்லுங்கள்” - என பாதுகாப்பு அதிகாரியிடம் கூறி வாகனத்தை எடுத்துச் சென்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் சில முன்னாள் அமைச்சர்கள் கைதுசெய்யப்படும் நிலை உருவாகும்

## மன்னாரில் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முலஃபர் தெரிவிப்பு

*(ஜோசப் நயன்)*

''இந்த நாட்டிலே வன்முறை அரசியல் இல்லாமல் போகும். திருட்டு அரசியல் இல்லாமல் போகும். தற்போது நிறைய அரசியல்வாதிகள் பயந்துபோயுள்ளனர். பலரின் கோவைகள் மேலே வந்துள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் சில முன்னாள் அமைச்சர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன'' - என தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முலஃபர் தெரிவித்தார்.

மன்னார், உப்புக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் (29) இரவு வேட்பாளர் எம்.எச்.எம்.பாஹிம் தலைமையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''எனது அமைச்சுக்குக் கீழ் சமாதான சகவாழ்வு மையம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் செயற்படுகின்றன. நான் தெற்கைச் சேர்ந்தவன். தெற்கில் பெரும்பான்மைச் சமூகத்துடன் இணைந்து அரசியல் செய்து வருகின்றேன். வடக்கில் இருக்கின்ற மக்கள் ஒற்றுமையின்றி இருப்பதாக செய்திகள் கிடைக்கின்றன. ஆனால், மன்னாருக்கு வந்து நேரடியாகப் பார்க்கின்றபோது அவ்வாறு எதுவும் இல்லை. இங்கு தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக மிகவும் அன்பாக வாழும் காட்சியைப் பார்க்கிறேன். எமது நாட்டில் சமாதானம் இல்லாமல் போவதற்கான காரணம் குறித்து ஜேர்மனியில் ஆய்வொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த நாட்டிலே தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்விடயம் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளின் முடிவில் கூறப்பட்ட விடயம் எமது நாட்டில் இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலுமான பிரச்சினை ஏற்படுவதற்கான முதல் தர காரணி அரசியல்வாதிகள். இரண்டாவது காரணம் மொழி.



அமைச்சை நான் பொறுப்பேற்றபோது உணர்ந்த விடயம்தான் வடக்கிலே வாழக்கூடிய மக்கள் அதிகம் தமிழ் மொழியில் பேசக்கூடியவர்கள் என்பது. அவர்களுக்கு ஏதும் பிரச்சினைகள் வருகின்றபோது - பொலிஸ் நிலையங்களுக்குச் செல்கின்றபோது அங்குள்ள பல பொலிஸாருக்கு தமிழ் மொழி தெரியாது. அங்கும் சில பிரச்சினைகள் ஏற்படும். வைத்தியசாலைகளிலும் சில நேரங்களில் மொழிப் பிரச்சினை ஏற்படுகிறது. இதனால் அவர்கள் சோர்வடைகின்றார்கள்; வேதனையடைகின்றார்கள். தமது சொந்த மொழியில் வேதனைகளையும் தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியாத நிலை உள்ளமை குறித்து அவர்கள் வேதனையடைகின்றனர்.

எமது அமைச்சின் கீழுள்ள தேசிய மொழிகள் ஆணைக்குழு வடக்கையும் கிழக்கையும் மொழி ரீதியாக இணைத்து சமாதான சகவாழ்வு சூழலை உருவாக்க வேண்டுமென்பதற்காக எல்லா சமூகத்தினரையும் பிரதிநிதித்துவப்படுத்தி பல அமைப்புகளை உருவாக்கி வருகிறோம்.

இன்னும் ஒருசில தினங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. நான் மன்னாருக்கு வந்தபோது தாராபுரம் கிராமத்துக்குப் போனேன். நான் பிரதி அமைச்சர். எனது வாகனத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வி.ஐ.பி. லைட்டைப் பயன்படுத்தவில்லை. ஆனால், நான் தாராபுரத்தில் நின்ற சமயத்தில் அரசியல் நோயால், மன நோயால் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தான் தொடர்ந்து இந்த ஏரியாவின் ஜாம்பவான் .

தாம்தான் இந்த ஏரியாவின் அரசியல்வாதிகள் என்று காட்டுவதற்காக வி.ஐ.பி. லைட்டைப் பயன்படுத்துகின்றனர். வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் தாராபுரம் போனால் அடிப்பார்கள் என்று கூறினார்கள். நான் தாராபுரம் போனது எவ்வித கலந்துரையாடலுக்கும் இல்லை. முடிந்தால் முன்னாள் அமைச்சர் எங்கள் அரசாங்கத்திலுள்ள யாரையாவது அடித்துப் பார்க்கட்டும் என்று. தற்போது அவர் பெட்டிப்பாம்பாக அடங்கியுள்ளார்.

இந்த நாட்டிலே வன்முறை அரசியல் இல்லாமல் போகும். திருட்டு அரசியல் இல்லாமல் போகும். தற்போது நிறைய அரசியல்வாதிகள் பயந்து போயுள்ளனர்.

அதிகமானோரின் கோப்புகள் மேலே வந்துள்ளன. இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் சில முன்னாள் அமைச்சர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

மக்கள் சொத்துகளைத் திருடியவர்கள், மக்களின் சொத்துகளைத் தவறாகப் பயன்படுத்தியவர்கள், மக்களை அச்சுறுத்தியவர்களுக்கு நாங்கள் நிச்சயமாக அதற்கான தண்டனையை வழங்குவோம்'' – என்றார்.

# ஒட்டுசுட்டானில் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரை

## ரவிகரன் எம்.பி. பங்கேற்பு

*(விஜயரத்தினம் சரவணன்)*

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உள்ளூர் அதிகாரசபைப் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரை இடம்பெற்றது.

இத்தேர்தல் பரப்புரையில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

அந்தவகையில், ஒட்டுசுட்டான் நகரப் பகுதிகளிலுள்ள கடைத் தெருக்கள், பொதுச்சந்தை, காதலியார் சம்மளங்குளம், சின்னச்சாளம்பன் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பரப்புரைச் செயற்பாடுகள் இடம்பெற்றன.



குறித்த தேர்தல் பரைப்புரையில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பண்டாரவன்னி, தண்டுவான், ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு வட்டார தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள், தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும்

## அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ்



''இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. இன, மத உரிமை என்பது அவர்களுக்குள்ள மத உரிமைகளுக்கான அடையாளங்களுக்கான உரிமை. அடிப்படை மனித உரிமைகளான உடை, உறையுள், உணவு, பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதாரம் இவை அனைத்துமே இல்லாமல் செய்யப்படுகின்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்'' என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகர சபையின் ஆறாம் வட்டாரம் கடை வீதி வேட்பாளரை ஆதரித்து கற்குழி பகுதியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''சந்தோஷமாக இருக்கிறீங்களா? நான் ஏன் அதைக் கேட்கின்றேனென்றால் குறுகிய நேரத்தில் ஏற்படுவது சந்தோஷம் அல்ல. உறுதியான ஒரு மனநிலையைப் பெற்றுத்தர சமூகப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. உணவு, உடை, உறையுள் கிடைக்கப்பெற்றால் சரியென சந்தேஷமாக வாழும் மக்களாக மாறியிருப்போம். அது பிழையான கருத்து. பாதுகாப்பான சமுதாயம், அபிவிருத்தியடைந்த நிலை, சமூக அங்கீகாரம் என்பன எமக்குத் தேவைப்படுகின்றன. இவை அனைத்தும் கிடைத்தால் எமது எதிர்கால சந்ததி அச்சம் கொள்ளாது வாழக்கூடிய ஒரு சூழல் உருவாகும்.

இலங்கைத் தேசியம் ஒரு பாதுகாப்பான தேசியமா? இலங்கை மக்கள் அனைவரும் சந்தோஷமாக இருக்கின்றார்களா? இலங்கை மக்களுக்கான இலவசக் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொழில் வாய்ப்பு, மொழியுரிமை, பேச்சுரிமை, பொதுப் போக்குவரத்து என்பன கிடைக்கக்கூடியதாக இலங்கை இருக்கிறதா? பெண்கள் பாதுகாப்பாக இருக்கிறார்களா?

இலங்கை பின்தங்கிய ஒரு நாடு. இலங்கையில் மக்களுடைய மனிதவுரிமைகள் மீறப்படுகின்றன. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. இன, மத உரிமை என்பது அவர்களுக்குள்ள மத உரிமைகளுக்கான அடையாளங்களுக்கான உரிமை. அடிப்படை மனித உரிமைகளான உடை, உறையுள், உணவு, பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதாரம் இவை அனைத்துமே இல்லாமல் செய்யப்படுகின்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அதனை மாற்றுவது கட்டாயமானதாகும். இலங்கையில் 100க்கு 51 சதவீதம் பெண்கள். வாக்காளர் பட்டியலில் 56 சதவீதம் பெண்களே உள்ளனர். இந்த நிலைக்குக் கூடுதலாக வாக்களித்தவர்கள் பெண்களே. இந்தத் தலைவிதிக்குக் காரணம் நாங்கள் தான். இதனைத் திருத்தவேண்டிய கட்டாயமும் எமக்கே உள்ளது. பெண்களுடைய அரசியல் விழிப்புணர்வு கட்டாயம் தேவை. பெண்கள் யுகமொன்றை ஆரம்பிப்பதற்கு பெண்களின் அரசியல் பங்கு அவசியமாகும். ஆதலால், இந்த உளளூராட்சித் தேர்தலில் பெண்களை முன்னிறுத்தியுள்ளோம்.

வடக்கு மாகாணத்திலிருக்கும் மக்கள் நாங்கள் யார் என்பதை அறியாதவர்களாக இருக்கின்றார்கள். அதேபோல், பாராளுமன்றத்தில் இருக்கின்ற 159 பேரையும் பெயராலும், அடையாளத்தாலும் உங்களால் கண்டுகொள்ள முடியுமா? முடியாது. யார் என்று ஆராயாமல் அநுரகுமார திசாநாயக்க முன்வைத்த அரசியல் கொள்கைக்காகவே வாக்களிக்கப்பட்டது. நான் சிங்கள மக்கள் அதிகமாகவுள்ள பிரதேசத்தில் வசிக்கிறேன். ஆனால், இலங்கை வரலாற்றில் ஒன்றரை இலட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளேன். தமிழ்ப் பிரதேசத்தில் கூட அப்படி எடுக்க முடியாது. ஆகவே, இனவாதம் என்பது குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது.

தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று பாராது நாட்டில் இதுவரை இருந்து வந்த நிலைமைக்கு மாறாக முன்மாதிரியாக அரசியலை முன்னெடுத்துள்ளோம். புலம்பெயர் வாழ் மக்களிடம் பணம் பெற்று தாம் பொட்டலம் கட்டி எடுத்துச் செல்லும் கலாசாரம் இங்கு இருக்கின்றது. அதனை நாம் முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவோம். அவ்வாறான கீழ்த்தரமான அரசியலை நாம் செய்ய மாட்டோம். புலம்பெயர் மக்களிடம் நாம் பேசியுள்ளோம். கருத்தியல் ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்துமாறு கோரியுள்ளோம்.08 மாதமாகி விட்டது என்ன செய்தார்கள் எனக் கேட்கிறார்கள். 16 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு 6,000 ரூபா நிதி வழங்கியுள்ளோம். அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கியுள்ளோம். முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவை அதிகரித்துக் கொடுக்க எனது அமைச்சு ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுக்காக 60 ரூபாவாக இருந்ததை 100 ஆக மாற்றியுள்ளேன். வெங்காயம், சீனி, முட்டை, எரிபொருள் என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. வீண் விரயத்தைத் தவிர்த்து அநாவசிய செலவைக் குறைத்தமையால் தற்போது மக்கள நலன்புரிகளை மேற்கொள்ள முடிந்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை கள்ளக் கும்பலுக்கு, மோசடிக்காரருக்குக் கொடுத்தால் என்ன நடக்கும்? எங்களது வேலைத்திட்டத்தைப் புறக்கணிக்கின்ற எதிர்க்கட்சிகள் அமர்ந்திருந்தால் அபிவிருத்தி நடக்குமா? அரசாங்கத்துடன் இணைந்து செயற்படக்கூடிய பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் தேவைப்படுகின்றன. இது குட்டி அரசாங்கம். மாநகரம், கிராமம் போன்றவற்றின் அபிவிருத்திக்கானவை. ஆகவே, கிராம மக்களை ஒளிபெறச்செய்ய திசைகாட்டிக்கு வாக்களியுங்கள்'' - எனத் தெரிவித்தார்.

# ஐ.பி.எல். போட்டி எண்ணிக்கையில் அதிகரிப்பு?



2028 ஐ.பி.எல். தொடரில் மொத்த போட்டிகளின் எண்ணிக்கை 94 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்ற முதலிரண்டு சீசனில் (2008-2009) தலா 59 போட்டிகள் நடத்தப்பட்டன. கடந்த 2010இல் (8 அணிகள்) 60 போட்டிகள் நடத்தப்பட்டன. அடுத்த சீசனில் (2011) கூடுதலாக 2 அணிகள் சேர்க்கப்பட்டு, மொத்தம் 74 போட்டிகள் நடந்தன. அடுத்த இரு சீசனில் (2012-2013) 9 அணிகள் பங்கேற்றன. இதில் தலா 76 போட்டிகள் நடந்தன.

பின்னர் 2014 முதல் 2021 வரை 8 அணிகளுக்கிடையில் தலா 60 போட்டிகள் நடந்தன. கடந்த 2022 முதல் புதிய இரு அணிகளுடன் சேர்த்து 10 அணிகள் பங்கேற்று வருகின்றன. இதில் 74 போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்நிலையில் எதிர்வரும் 2028 சீசன் முதல், 94 போட்டிகளாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், கூடுதலாக அணிகள் சேர்க்கப்பட மாட்டாது. பத்து அணிகள் மட்டுமே பங்கேற்கும்.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 தடவைகள் மோதும். ஒரு அணி 18 லீக் போட்டிகளில் விளையாடும். இதன்படி 90 லீக், 4 பிளேஓப் என மொத்தம் 94 போட்டிகள் நடத்தப்படும்.

இது தொடர்பில் ஐ.பி.எல். நிர்வாகியொருவர் தெரிவிக்கையில், ஐ.பி.எல். போட்டிகளின் எண்ணிக்கையை 94 ஆக அதிகரிக்க பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் - என்றார்.

# கிரிக்கெட் விளையாட்டை உறுதிசெய்த ஆசிய ஒலிம்பிக் பேரவை

ஜப்பானில் அடுத்த வருடம் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபரில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில், இதில் கிரிக்கெட் மற்றும் கலப்பு தற்காப்புக் கலை போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை ஆசிய ஒலிம்பிக் பேரவை அதனுடைய உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிட்டு உறுதி செய்துள்ளது.

இதற்கான முறையான அனுமதி நகோயா சிட்டியில் நடந்த இயக்குநர்கள் சபை கூட்டத்தில் அளிக்கப்பட்டது. இதன்படி, ஜப்பானின் அய்ச்சி மாகாணத்தில் கிரிக்கெட் போட்டி நடைபெறும் என தெரிவிக்கப்பட்ட போதும் சரியான இடம் எதுவென்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

2022ஆம் ஆண்டு நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இடம்பெற்ற கிரிக்கெட்டில் ஆடவர் மற்றும் மகளிர் என இரு பிரிவிகளிலும் இந்தியா வெற்றிபெற்று தங்கப்பதக்கம் தட்டிச் சென்றது.

இதேவேளை 2028ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளிலும் கிரிக்கெட் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன தைபேயை வீழ்த்தி ஆசிய கன்னி ஹொக்கி சம்பியனான ஓமான்




***அகீல் சிஹாப்***

ஆசிய ஹொக்கி கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசியக் கிண்ண ஆடவர் ஹொக்கி தொடரின் இறுதிப்போட்டியில் சீன தைபேயை 4-3 என்ற கணக்கில் வீழ்த்தி, ஓமான் தேசிய ஹொக்கி அணி தனது முதல் ஆசிய ஹொக்கி கூட்டமைப்பு கிண்ண சம்பியன் பட்டத்தை வென்றது. நடப்புச் சம்பியனான பங்களாதேஷ், கஜகஸ்தானை 3-0 என்ற கணக்கில் வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை வென்றது.

ஹொக்கி தொடர் இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் ஏப்ரல் 17 முதல் 27 வரை நடைபெற்றது. இதில் 10 ஆசிய அணிகள் 10 பரபரப்பான நாட்களில் போட்டியிட்டன. இலங்கை ஹொக்கி அணி தாய்லாந்தை எதிர்த்து வெற்றியைப் பதிவுசெய்து ஏழாமிடத்தைப் பிடித்தது.

சம்பியன் பட்டத்தை ஓமான், இரண்டாமிடத்தை சீன தைபே, மூன்றாமிடத்தை பங்களாதேஷ் கைப்பற்றின. அடுத்த இடங்களை முறையே கஜகஸ்தான், ஹொங்கொங், உஸ்பெகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து, இந்தோனேசியா, சிங்கப்பூர் அணிகள் பிடித்தன.

**சிறப்பு விருதுகள்**

அதிக கோல் அடித்தவர் - ஹ்சீஹ் சுங்-யூ (சீன தைபே)

சிறந்த கோல் கீப்பர் - டோலிப்பேவ் டவ்லட் (உஸ்பெகிஸ்தான்)

தொடரின் வளர்ந்துவரும் நட்சத்திரம் - டியூசெங்காசி அகைம்டே (கஜகஸ்தான்)

தொடரின் சிறந்த வீரர் - ஹ்சீஹ் சுங்-யூ (சீன தைபே).

# ரிட்ஸ்பரி ரிலே திருவிழா-2025 வெற்றிகரமாக நிறைவு



ரிட்ஸ்பரி ரிலே திருவிழா வானது அண்மையில் தியகம, மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் வெற்றிகரமாக நிறைவடைந்தது. மூன்று நாட்கள் கடுமையான போட்டி மற்றும் சாதனைமிகு செயற்றிறன்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தி முடிவடைந்திருந்தது. நாடு முழுவதையும் சேர்ந்த 250க்கும் அதிகமான பாடசாலைகளின் 5000க்கும் அதிகமான இளம் மெய்வல்லுநர் வீரர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றதுடன், அடுத்த தலைமுறை விளையாட்டு வீரர்களின் திறமைகள், திறன்கள், ஆற்றல் மற்றும் விளையாட்டுப் பண்புகளை வெளிப்படுத்த உதவும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வுக்கு ரிட்ஸ்பரி ஏக அனுசரணை வழங்கியிருந்தது. ஆண்கள் பிரிவில் கொழும்பு, புனித பத்திரிசியார் கல்லூரி அணி 155 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தையும் நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி இரண்டாமிடத்தையும் வென்னப்புவ சென்.ஜோசப் வாஸ் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலை 130 புள்ளிகளுடன் சம்பியன் பட்டத்தை வென்றதுடன், வலல ஏ. ரத்நாயக்க மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும் பன்னிபிட்டிய தர்மபால வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

பாடசாலை அளவிலான போட்டிகளுக்கப்பால், 2025ஆம் ஆண்டு கார்னிவெலின் இறுதி நாளில் ஒரு சிறப்பு சர்வதேச ரிலே சுற்று இடம்பெற்றது. இறுதிச்சுற்றில் இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் மாலைதீவு அணிகள் பங்கேற்றதில் இலங்கை அணி வெற்றிபெற்றது.

# விளையாட்டுத் துளிகள்

இலங்கையில் நடைபெற்றுவரும் முத்தரப்பு மகளிர் ஒருநாள் சர்வதேச தொடரில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காத காரணத்தால் இந்திய அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்திய அணி வீராங்கனைகளுக்கு போட்டி கட்டணத்தில் 5 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★

கோபா டெல் ரே எனப்படும் ஸ்பானிஷ் கிண்ண உதைபந்து தொடரின் இறுதி ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்களான பார்சிலோனா, ரியல் மெட்ரிட் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் வழக்கமான நேரம் முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலை நீடித்ததால், மேலதிக நேரத்தின் 116ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் ஜூல்ஸ் கவுண்டே அடித்த கோல் மூலம் 32ஆவது தடவையாக பார்சிலோனா சம்பியன் பட்டத்தை சொந்தமாக்கியது.

★★★★★★

ஐ.பி.எல். அணிகளில் ஒன்றான ஐந்து தடவைகள் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணி, ஐ.பி.எல். வரலாற்றில் முதலில் துடுப்பெடுத்தாடி 16 தடவைகள் 200 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளது. இவற்றில் ஒன்றில் கூட தோல்வி காணாத சாதனையை மும்பை இந்தியன்ஸ் அணி தன்வசம் கொண்டுள்ளது.

★★★★★★

ஸ்பானிஷ் கிண்ண உதைபந்து தொடரின் இறுதிப் போட்டியில் ரியல் மாட்ரிட் வீரர் அன்டோனியோ ரூடிகர் தான்செய்த செயலுக்கு மன்னிப்பு கேட்டுள்ளார். நடுவரின் தீர்ப்பில் அதிருப்தியடைந்த ரூடிகர், நடுவரை அடிக்கவும் பாய்ந்த நிலையில், அணி உதவியாளர்கள் அவரை தடுத்துநிறுத்தி அவரை களத்திலிருந்து வெளியேற்றினார்கள். நடுவரைத் தாக்கினால் 2 ஆண்டுகள் அல்லது 10-12 போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. நடுவருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்பதால் தண்டனை அதிகமாக இருக்காது என்றும் கூறப்படுகிறது.

★★★★★★

ரியல் மெட்ரிட் அணிக்காக விளையாடிவரும் கைலியன் எம்பாப்பே கிறிஸ்ரியானோ ரொனால்டோவின் பல நாள் சாதனையை முறியடித்துள்ளார். ரியல் மெட்ரிட் அணிக்காக ஒரே சீசனில் அதிக கோல்களை அடித்த வீரர் என்ற ரொனால்டோவின் சாதனையை எம்பாப்பே (34 கோல்கள்) முறியடித்துள்ளார். மேலும் இந்த சீசனில் இன்னும் 4 கோல்களை அடிக்கும் பட்சத்தில் எம்பாப்பே மேலும் ஒரு சாதனையை நிகழ்த்துவார்.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 50

**ராஜஸ்தான் VS மும்பை**

ஜெய்ப்பூர் - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 48

*கொல்கத்தா - 204/9 (20)*
*டெல்லி - 190/9 (20)*
*கொல்கத்தா 14 ஓட்டங்களால் வெற்றி*

## PSL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 20

**முல்தான் VS கராச்சி**

லாஹூர் - இரவு 8.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 18

*முல்தான் - 89/10 (17)*
*குவெட்டா - 90/0 (6.5)*
*குவெட்டா 10 விக்கெட்களால் வெற்றி*

# மாவடிப்பள்ளி அஷ்ரப் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி

***நூருல் ஹுதா உமர்***

கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி கமு/அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி 13 வருடங்களின் பின்னர் கடந்த சனிக்கிழமை யூ.கே.முஹம்மது நஜீப் மற்றும் எம்.எஸ்.எம். அசீம் ஆசிரியர்களின் நெறியாள்கையில் பாடசாலை அதிபர் ஏ.எல்.ரஜப்டீன் தலைமையில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், கௌரவ அதிதிகளாக நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர், பிரதி கல்வித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வி.சாந்தரூபன், கோட்டக்கல்விப் பணிப்பாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.சஞ்ஜீவன், உடற்கல்விக்குப் பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம்.முதர்ரீஸ், ஆசிரிய ஆலோசகர் ஏ.எம்.அன்சார், இப்பாடசாலையின் ஓய்வுநிலை முன்னாள் அதிபர் எம்.எஸ்.எம்.சைபுதீன், அதிபர் வி.எம்.ஸம்ஸம், எச்.எம்.எம்.அனீஸ் , ஏனைய பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பாடசாலை முன்றிலில் இல்ல விளையாட்டுப் போட்டியின் நினைவாக பிரதம அதிதியின் கரங்களால் மரக்கன்றும் நடப்பட்டது. சிறப்பாக நான்கு தினங்களாக இடம்பெற்ற இப்போட்டியில் 386 புள்ளிகளைப் பெற்று சபா இல்லம் முதலாம் இடத்தைத் தனதாக்கிக்கொண்டது.

தற்போது விற்பனையில்...

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான

ஜீனியர் தமிழன்

மே மாத சஞ்சிகைகள்

பாடசாலை பாடத்திட்டத்தின்படி.
தவணைகளின் அடிப்படையில்.
தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டு
வெளிவருகின்றன.




ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07